# இந்தியப் படையே வெளியேறு



நெடுமாறன்

ரிசை எண். 2.

# 1. மாறாத தலைகுனிவு

சரித்திரத்தின் சக்கரம் ஒரு முழுச்சுற்று சுற்றி வந்து நின்றுவிட்டது. இலங்கை அதிபர் பிரேமதாசா பேச்சு வார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளை அழைக்க அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு பேச்சு நடத்தி வருகிறார்கள்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதக் கலவரத்திற்குப்பின் இந்திய அரசின் தலையீட்டின் பேரில் தமிழர் பிரதிநிதிகளும், ஜெயவர்த்தனாவும் பேச்சு வார்த்தை நடத்தத் தொடங்கினார்கள். அப்போதிருந்து 1987ஆம் ஆண்டு வரை கடந்த 5 ஆண்டுக்காலமாக இந்திய அரசின் முன்னிலையிலும், ஏற்பாட்டின் விளைவாகவும் இலங்கை அரசின் பிரதிநிதிகளும், தமிழர்களின் பிரதிநிதிகளும் பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள். ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்பாடு ஏற்பட்ட பிறகு இலங்கை அரசின் சார்பில் இந்தியாவே விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்தியது.

ஆனால் கடந்த ஆறு ஆண்டுகளில் இந்திய அரசின் முயற்சி இல்லாமலும் அதன் பிரதிநிதிகள் இல்லாமலும் இலங்கை அரசின் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் முதல் தடவையாகச் சந்தித்துப் பேசத் தொடங்கி இருக்கிறார்கள்.

இதைக்கண்டு பிரதமர் ராஜீவ் கதிகலங்கிப் போய் இருக்கிறார் என்பது அவரது பதட்டமான நடவடிக்கைகளின் மூலம் தெரிகிறது. இச்செய்தி வெளியான நேரத்தில் டில்லியில் நடைபெற்ற இந்திய இராணுவத் தளபதிகள் கூட்டத்தில் பேசிய பிரதமர் ராஜீவ் 'இலங்கையிலுள்ள நமது படையினரில் கணிசமான பகுதியினரை உடனடியாகத் திரும்பப்பெறப் போவதாக' அறிவித்தார்.

இந்தத் திடீர் அறிவிப்புக்குப் பின்னணி என்ன? அவசியம் என்ன? பிரேமதாசாவை மிரட்டுவதே ராஜீவின் நோக்கமாகும். 'இந்திய இராணுவத்தைத் திரும்பப்பெறுவேன்' என்று கூறினால் பிரேமதாசா பயப்படுவார், விடுதலைப் புலிகளுடன் பேசுவதை நிறுத்திக்கொள்வார் என எதிர்பார்த்தார். ஆனால் பிரேமதாசா மசியவில்லை.

எனவே இந்திய வெளியுறவுத்துறையின் செயலாளர் கே.என். சிங் என்பவரை அவசர அவசரமாகக் கொழும்புவுக்கு ராஜீவ் அனுப்பினார். இந்தியாவைப் புறக்கணித்துவிட்டு விடுதலைப்புலிகளுடன் பேசுவதால் இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ள தர்மசங்கடம் குறித்து அவர் விளக்கினார். இந்திய-இலங்கை உடன்பாட்டிற்கே இது எதிரானது என வாதாடிப்பார்த்தார். இந்திய அரசு பல ஆயிரம் இராணுவ வீரர்களைப் பலி கொடுத்தும், பல ஆயிரம் கோடி ரூபாய் பணச் செலவிற்கும் இடையே விடுதலைப்புலிகளுடன் போராடி வருகிறது. இந்திய இராணுவ முயற்சியின் பெயரில் மாகாணசபையும் ஒரு அரசும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களைப் புறக்கணித்துவிட்டு விடுதலைப்புலிகளுடன் பேசினால் தமிழ் மாகாண அரசை தமிழ் மக்களே மதிக்கமாட்டார்கள் என்றெல்லாம் கே.என். சிங் வாதாடியிருக்கிறார். ஆனால் பழம் பெருச்சாளியான பிரேமதாசா மசியவில்லை.

'பேச்சுவார்த்தை விவரத்தையாவது அவ்வப்போது இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தவேண்டும். இந்திய-இலங்கை உடன்பாட்டிற்கு உட்பட்டே பேச்சு வார்த்தை அமைய வேண்டும்' என்ற குறைந்தபட்ச கோரிக்கைகளை பிரேமதாசாவிடம் சமர்ப்பித்து விட்டு ராஜீவின் தூதர் வெறுங்கையுடன் இந்தியா திரும்பியுள்ளார்.

இன்னொரு கோமாளித்தனத்தையும் இந்திய அரசு செய்துள்ளது. 'தமிழ் மாகாண அரசுக்கு இன்னும் அதிக அதிகாரங்களை வழங்கவேண்டும்' என திடீர்

கூக்குரலையும் இந்திய அரசு எழுப்பியுள்ளது. மாகாண அரசு அமைந்து பல மாதங்கள் ஆன போதிலும் அதற்குரிய அதிகாரங்களைப் பெற்றுத்தருவதில் அக்கரை காட்டாத இந்திய அரசு திடீரென இப்பிரச்னையைக் கிளப்பியதன் மூலம் மாகாண அரசுக்குப் போதுமான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்ற உண்மையை உலகறிய ஒப்புக் கொண்டுவிட்டது.

## நிபந்தனை

இந்திய இராணுவத்துடன் போர்புரிய விடுதலைப்புலிகள் விரும்பவில்லை. ஆனால் போரை இந்தியா அவர்கள்மீது திணித்தது. வேறு வழியில்லாமல் விடுதலைப்புலிகள் எதிர்த்துப் போராட நேர்ந்தது. இதுதான் உண்மை. 'போர் நிறுத்தம் செய்து பேச்சு நடத்துவோம்' என விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பலமுறை அறிவித்தும் கூட இந்திய அரசு இணங்க மறுத்தது. பிரதமர் ராஜீவ் கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதித்தார்.

1. ஆயுதங்களை முழுவதுமாகக் கொடுத்துவிட்டுச் சரணடைய வேண்டும்.
2. இந்திய-இலங்கை உடன்பாடு முழுவதையும் ஏற்பதாக அறிவிக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளை ஏற்க பிரபாகரன் மறுத்து கடந்த 1 1/2 ஆண்டுக் காலமாக வீரமுடன் போராடி வருகிறார்.

1 இலட்சத்துக்கு மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்களை எதிர்த்து பிரபாகரன் தலைமையில் விடுதலைப்புலிகள் அஞ்சாமல் நெஞ்சுரத்துடன் போராடியது கண்டு சிங்கள மக்களே வியந்து பாராட்டுவதன் எதிரொலியாகத்தான் பிரேமதாசா பேச்சுக்கு அழைப்பு விடுத்தார்.

எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் பிரேமதாசா பேச்சுக்கு வருமாறு அழைத்தபோது பிரபாகரன் அதனை ஏற்றுக்கொண்டதில் தவறென்ன?

சிங்களருக்கும்-தமிழருக்கும் இடையே தகராறு ஏற்பட்டபோது அதனைத் தீர்த்துவைக்கும் நடுவராக உள்ளே நுழைந்த இந்தியா இச்சமரசப் பேச்சை வரவேற்று அது வெற்றியடைய உதவ முன்வந்திருக்க வேண்டும். ஆனால் அதற்குமாறாக பேச்சுவார்த்தையைச் சீர்குலைக்கும் வேலையில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது.

இப்பேச்சு ஓரளவிற்கு வெற்றிபெற்றாலும் உலக அரங்கில் தனது மதிப்பு சரிந்துவிடும் என இந்திய அரசு அஞ்சுகிறது.

இந்தியாவின் தலையீடு இல்லாமல் சிங்களரும்-தமிழரும் பேசமுடிகிறது என்றால் இனி இந்தியாவுக்கு அங்கு வேலை இல்லை என்பது அம்பலமாகி விடும்.

இதுவரை விடுதலைப்புலிகளுடன் பேச இந்தியா மறுத்து வந்ததற்கு உள்நோக்கம் கற்பிக்கப்படும். தன் தலையை உள் நுழைத்துக்கொள்வதற்காகத்தான் இந்திய அரசு வேண்டுமென்றே விவகாரத்தைப் பெரிதாக்கிவிட்டது என்ற பழி இந்தியா மீது விழும்.

பிடிவாதம் நிறைந்த பிரபாகரனுக்கு சமரசத்தில் நாட்டமில்லை. எனவேதான் பேச்சுக்கு வரமறுக்கிறார் என இந்திய அரசு இதுவரை செய்துவந்த பொய்ப் பிரச்சாரம் அம்பலமாகும்.

தமிழ் மாகாண. பொம்மை அரசுக்கு உண்மையில் மக்களிடம் செல்வாக்கு இல்லை. தமிழீழ மக்களின ஆதரவு பெற்ற இயக்கம் விடுதலைப்புலிகளின் இயக்கம்தான் என்ற உண்மை நிலைநாட்டப்படும்.

முன்பு இருந்த இந்தியத் தூதுவர் தீட்சித் இருதரப்பிற்குமிடையே தூது சென்றபோது நடத்திய கபட நாடகங்கள் முழுமையாக வெளியாகிவிடும்

அடுத்த பொதுத்தேர்தலைச் சந்திக்க வேண்டிய வேளையில் மேலே கண்டவாறு நிலைமைகள் உருவாவது தன்னை வெகுவாகப் பாதித்துவிடும் என பிரதமர் ராஜீவ் அஞ்சுகிறார்.

முதல்கட்டப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் இந்திய ராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை இருதரப்பும் இணைந்து வெளியிட்டுவிட் டார்கள் . இனி இந்தியா என்ன செய்யப்போகிறது? என்ற கேள்வி உலக அரங்கில் எழுந்துள்ளது .

இந்த அவலநிலை ஏற்பட காரணம் என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். இரண்டாண்டுகளுக்கு முன் இந்திய-இலங்கை உடன்பாடு செய்யப் பட்டபோது அது அவசரத்தில் அள்ளித்தெளிக்கப்பட்ட கோலமாக அமைந்து இப்போதைய அலங்கோலத்திற்கு வழிவகுத்துவிட்டது.

கடந்த இரண்டாண்டுகால நிகழ்ச்சிகளை நாம் நினைவுபடுத்திக் கொண் டால் பல உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியும்.

## 2. உடன்பாடும் - அதன் பின்னரும்

1987ஆம் ஆண்டு செப்டம்பர் மாதவாக்கில் யாழ்ப்பாண மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பவிடாமல் இலங்கை ராணுவம் முற்றுகை செய்தது. இதற்கெதிராகத் தமிழ்நாட்டு மக்கள் கண்டனக் குரல் எழுப்பினார்கள். இதையொட்டி யாழ்மக்களுக்கு உதவுவதற்காக செஞ் சிலுவைச் சங்கக்கொடிகள் கட்டிய படகுகளில் உணவு மற்றும் மருந்துப்பொருட் களை இந்தியா அனுப்பியபோது அவற்றை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கைஅரசு மறுத்தது. உடனே இந்தியா விமானம் மூலம் இலங்கையின் வானப்பகுதிகளில் ஊடுருவிச் சென்று உணவுப்பொட்டலங்களை வீசியது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் தனக்குள்ள அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவதற்காகவும், மனித உரிமைகளை மீறும் இலங்கையின் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவும் இவ்வாறு செய்ததாக இந்தியா அறிவித்தது. இதை முற்றிலுமாக நம்பிய ஈழத் தமிழர்கள் தங்களை வாழ்விக்க வந்த தெய்வமாகப் பிரதமர் ராஜீவைப் போற்றி னார்கள்.

> ஆனால் அப்போது அவர்களுக்கு ஒரு உண்மைத் தெரிந்திருக்க வில்லை. தங்கள்மீது கருணைகொண்டு உணவுப்பொருட்களை வீசிய இந்திய விமானங்கள் விரைவிலேயே தங்கள் தலைமீது குண்டுகளைவீசி அழிக்கப்போகின்றன என்பதை அவர்கள் அறிந் திருக்கவில்லை. இந்தியப் பிரதமர் ராஜீவ் எடுத்த இந்த நடவடிக் கைகள் தங்கள்மீது கொண்ட அன்பினால் அல்ல. மாறாக ஜெய வர்த்தனாவை மிரட்டுவதற்காக செய்யப்பட்ட தந்திரம் என்பதை காலம்கடந்துதான் ஈழத்தமிழர்கள் உணர்ந்தனர்.

1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24ஆம் தேதி ஒரு இந்திய இராணுவ ஹெலிகாப்டர் விமானங்கள் யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கின. அதிலிருந்து இறங்கிய இந்திய அதிகாரிகள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார்கள். ஈழத்தமிழர்களின் விடுதலைக்காகப் போராடும் ஒரே அமைப்பு விடுதலைப்புலிகளின் அமைப்பு என்பதை இந்தியா ஏற்றுக்கொண்டிருப்பதாக அவர்கள் கூறினார்கள். மிக முக்கியமான விஷயமாகப் பிரதமர் ராஜீவ் அவரிடம் பேசவிரும்புவதாகச் சொல்லி அந்த அதிகாரிகள் அவசரப்படுத்தி னார்கள். தங்கள் இயக்கத்திற்கும், ஈழமக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கும் இந்தியாவின் அங்கீகாரமாகக் இதைக்கருதி தன்னுடைய மக்களுக்கும், தோழர் களுக்கும் அறிக்கை மூலமாகத் தெரிவித்துவிட்டுப் பிரபாகரன் இந்திய விமானம்

மூலம் டெல்லி புறப்பட்டார். டெல்லி அழைத்துச் செல்லப்பட்ட பிரபாகரனும் அவரது தோழர்களும் 'அசோகா' ஓட்டலில் தங்க வைக்கப்பட்டார்கள். இந்தியத் தூதுவர் தீட்சித், வெளிநாட்டுச் செயலாளர் கே.பி.எஸ். மேனன் மற்றும் முக்கிய அதிகாரிகள் பிரபாகரனைச் சந்தித்து உடன்பாடு பற்றி முதன்முதலாகத் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் பிரபாகரன் அதிர்ச்சியடைந்தார். உடன்பாட்டின் நகலைக்கூட அவரிடம்கொடுக்க அதிகாரிகள் தயங்கினார்கள். அந்த உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள பிரபாகரன் மறுத்தார். அவரைச் சம்மதிக்க வைக்க மேலும் நிர்ப்பந்தங்கள் செய்யப்பட்டன. சென்னையிலிருந்து முதலமைச்சர் எம்.ஜி.ஆரும், அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் டெல்லிக்கு வரவழைக்கப் பட்டு அவர்கள்மூலமும் நிர்ப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் பிரபாகரன் தன்னிலையில் உறுதியாகவிருந்தார். வெளியிலிருந்து யாரும் அவரைச் சந்திக்க முடியாதபடி பலமான கட்டுக்காவல் போடப்பட்டது. பிரதமர் சந்திக்க விரும்புவதாகக் கூறி அழைத்துச் சென்றவர்கள் பிரபாகரனும், பிரதமரும் சந்திக்க ஏற்பாடு செய்யவில்லை. இடையில் நான்கு நாட்கள் பறந்தோடுகின்றன. பிரபாகரன் சம்மதிக்க மறுத்துவிட்டார் என்பது திட்டவட்டமாகத் தெரிந்தவுடன் சென்னையிலுள்ள மற்ற இயக்கங்களின் பிரதிநிதிகள் டெல்லிக்கு அழைத்து வரப்பட்டு அவர்களிடம் சம்மதம் வாங்கப்படுகிறது. விடுதலைப்புலிகளைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இந்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டனர் என பிரதமர் கூறினார். 'விடுதலைப்புலிகளின் எண்ணிக்கை இரண்டாயிரம் பேர் தான் இருக்கும். இந்த இரண்டாயிரம் பேர்களுக்காக நாங்கள் காத்திருக்கப் போவதில்லை' என்று அலட்சியமாகப் பிரதமர் ராஜீவ் அறிவித்தார். யார் ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும் உடன்பாட்டில் கையெழுத்திடத்தான் கொழும்புச் செல்லப்போவது உறுதி என்று பிரதமர் ராஜீவ் அறிவித்து விட்டு அவ்விதமே கொழும்புச் சென்று உடன்பாட்டில் கையெழுத்திட்டார். கொழும்பு புறப்படுவதற்கு முன்னால் ராஜீவ்-பிரபாகரன் சந்திப்பு நிகழ்ந்தது. இந்த உடன்பாடு செயல்படுவதற்கு 3 மாத கால அவகாசம் தருமாறும், உடன்பாடு செயல்படாவிட்டால் விடுதலைப்புலிகளுக்கு சகல உதவிகளையும் செய்வதாகவும் பிரதமர் கூறினார். இடைக்கால அரசின் முதல்வராகப் பிரபாகரனை நியமிக்க ஆவனசெய்வதாகவும் ஆசை காட்டினார். ஆனால் பிரபாகரன் இவற்றுக்கு மசியவில்லை. உடன்பாட்டை அவர் ஏற்காவிட்டாலும் இந்தியாவின் முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்க அவர் விரும்பவில்லை.

> தொடக்கத்தில் இந்திய ராணுவத்திற்கு, விடுதலைப்புலிகள் சகல விதத்திலும் ஒத்துழைப்புக்கொடுத்தார்கள். ஆயுதங்களின் கணிசமான பகுதியை ஒப்படைத்தார்கள். இடைக்கால அரசு பற்றிய பேச்சுவார்த்தையும் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

இந்த உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள முக்கியமான அம்சங்களை நிறைவேற்றுவதற்கு ஜெயவர்த்தனா தயங்கினார். [illegible] தந்திரத்தில் அவர் ஈடுபட்டார். கீழ்க்கண்ட வகைகளில் அவர் உடன்பாட்டை மீறினார்.

1. தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யத் தவறினார்.
2. வடக்கு-கிழக்கு மாநிலங்களில் நிலவும் அவசரகால நிலையை ரத்து செய்யவில்லை
3. கிழக்கு மாநிலத்தில் செயல்படும் சிங்கள ஊர்க்காவல் படைகளைக் கலைக்கவில்லை.
4. சிங்கள ராணுவம் பாசறையை விட்டு வெளியேறக்கூடாது என்பது கடைப்பிடிக்கப்படவில்லை
5. தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவில்லை.
6. வடக்கு-கிழக்கு மாநிலங்களில் சிங்களப் போலீஸ் நிலையங்கள் திறக்கப் பட்டன.

7. வடக்கு-கிழக்கு மாநிலங்கள் இணைப்பை அரசியல் சட்டப்பூர்வமாக்கத் தவறியது.
8. மாநில சபைக்குள்ள எஞ்சிய அதிகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த மறுத்தது.

. உடன்பாட்டின் முக்கிய அம்சங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி தீலீபன் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டான். இந்த உண்ணாவிரதத்தை இந்தியஅரசு அலட்சியப்படுத்தியது. உடன்பாட்டை மீறிய ஜெயவர்த்தனாவை கண்டிக்க இந்தியஅரசு முன் வரவில்லை. 12 நாட்கள் ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதம் மேற்கொண்ட திலீபன் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்தான். இந்தியாவுக்கு எதிராக அவன் உண்ணாவிரதம் இருக்கவில்லை. உடன்பாட்டை நிறைவேற்றவேண்டும் என்பதற்காகத் தான் அவன் உண்ணாவிரதமிருந்தான். திலீபனின் சாவையொட்டி தமிழர்கள் கிளர்ந்தெழுந்தனர். இதன்விளைவாக மீண்டும் இந்தியத் தூதுவர் தீட்சித்தும், பிரபாகரனும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இடைக்கால அரசு பற்றிய பிரச்னைகள் சுமுகமாகத்தீர்க்கப்பட்டன. இனிமேல் எந்தப் பிரச்னையும் இல்லை என்று தீட்சித் சொல்லிவிட்டுச் சென்றார். இத்தகைய சுமுகநிலை உருவாவதை ஜெயவர்த்தனா விரும்பவில்லை. எனவே புலிகள் தலைமையில் இடைக்கால அரசு ஏற்படாமல் தடுக்க அவர் ஒரு சதித் திட்டத்தைத் தீட்டினார். விடுதலைப்புலிகள் கையில் அதிகாரம் சிக்குமானால் பின்னர் அவர்களைக் கட்டுப்படுத்த தன்னால் முடியாமல் போகும் என்று ஜெயவர்த்தனா நினைத்தார். எனவே இடைக்கால அரசு பற்றிய முடிவை ஒத்திவைத்தார். இதற்கிடையில் சென்னையிலுள்ள தங்கள் அலுவலகத்திலிருந்த சகல ஆவணங்களையும் இலங்கைக்குக் கொண்டுவர பிரபாகரன் விரும்பினார். எனவே குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 விடுதலைப்புலிகளைப் படகுமூலம் இந்தியாவுக்கு அனுப்பினார். இவர்கள் புறப்படுவதற்கு முன்னால் இந்திய ராணுவ அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிட்டுத்தான் புறப்பட்டார்கள். உடன்பாட்டின்படி பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டபிறகு இவ்வாறு செய்வது தேவையில்லை என்றாலும். இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு முறைப்படி தங்கள் பயணத்தைப் பற்றிக் கூறினார்கள். இந்திய ராணுவ அதிகாரிகள் இப்பயணம் பற்றி தீட்சித்திற்குத் தெரிவித்தார்கள். தீட்சித் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரான லலித் அதுலத்முதலிக்கு அதைத் தெரிவித்தார். இருவருமாகக்கூடி ஒரு சதித்திட்டம் வகுத்தனர். இதன் விளைவாக நடுக்கடலில் விடுதலைப்புலிகள் 17 பேரும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இந்த 17 பேரும் எத்தகைய எதிர்ப்பும் தெரிவிக்காமல் சிறைப்பட இசைந்தனர். பலாலி இராணுவமுகாமில் இவர்கள் சிறைவைக்கப் பட்டார்கள். இந்த 17 பேரையும் விடுவிக்கவேண்டுமென்று பிரபாகரன் இந்திய ராணுவ அதிகாரிகளிடம் முறையிட்டார். ஆனால் லலித் அதுலத்முதலி இரகசியமாக டெல்லிக்குப் பறந்துசென்றார். பிரதமர் ராஜீவைச் சந்தித்துப்பேசி இந்த 17 பேரையும் கொழும்புவிற்குக் கொண்டுச் செல்வதற்கு அவருடைய சம்மதத்தைப்பெற்றார். இந்தப்பிரச்னை முற்றிவிட்டது. இதன் விளைவாக புலேந்திரன், குமரப்பா உட்பட 12 விடுதலைப்புலிகள் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய நேர்ந்தது. விடுதலைப்புலிகள் ஆயுதங்களை எடுத்துச்சென்றதாக இந்திய-இலங்கை அரசுகள் குற்றம் சாட்டின. பொதுவாக விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களை இலங்கை இராணுவம் கைப்பற்றினால் உடனடியாக அதைப்பற்றி பெரும் பிரச்சாரம் செய்வார்கள். ஆனால் மேலேகண்ட 17 பேரும் கைது செய்யப்பட்டு 3 நாட்கள் வரை அவர்கள்மீது எந்தக் குற்றத்தையும் யாரும் சுமத்தவில்லை. 12 பேர் உயிர்த்தியாகம் செய்தபிறகுத் தங்கள் மீது பழிவிழக்கூடாது என்பதற்காக ஆயுதத்தைக் கடத்தியதாகக் குற்றம்சாட்டத் தொடங்கினார்கள். ஜெயவர்த்தனாவை திருப்திப்படுத்துவதற்காக இத்தகைய காரியத்தை ராஜீவ் செய்தார்.

ராஜீவ்-ஜெயவர்த்தனா ஆகியோர் வேண்டுமென்றே திட்டமிட்டு விடுதலைப்புலிகளுக்கு ஆத்திரமூட்டி அவர்கள்மீது இராணுவ நடவடிக்கையை எடுப்பதற்காகவே இதைச் செய்தார்கள். அப்போதும் கூட பிரபாகரன் நிதானம் இழக்கவில்லை. பொறுமையைக் கடைப்பிடித்தார். இதற்கிடையில் கிழக்கு மாநிலத்தில் 'ரா' உளவுத்துறையின் தூண்டுதலின் பேரில் போட்டிப் போராளி இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் சிங்களக் குடியிருப்புக்களைத் தாக்கிப் பலரைக் கொன்றார்கள். அந்தப்பழியை விடுதலைப்புலிகள்மீது சுமத்தி அவர்கள்மீது இந்திய இராணுவம் போர்த் தொடுத்தது.

விடுதலைப்புலிகள்மீது போர்த் தொடுப்பதற்கு இந்திய ராணுவத்திற்கு ஏதாவது ஒரு காரணம் தேவைப்பட்டது. அந்தக் காரணங்களை அவர்களே உண்டாக்கிக்கொண்டு போரைத் தொடுத்தனர்.

விடுதலைப்புலிகளையும் அவர்களின் ஆதரவாளர்களையும் அடியோடு ஒழித்துக்கட்டுவதுதான் இந்தியராணுவத்தின் உள்நோக்கமாகும். இதன்மூலம் இலங்கை அரசாங்கத்தைத் திருப்திப்படுத்தி சிங்கள மக்களையும் தங்களுக்கு ஆதரவாகத் திருப்பமுடியும் என்று இந்தியஅரசு நினைத்தது.

## 3. போர் ஏன்?

இந்திய-இலங்கை உடன்பாடு வெளியில் தெரியாத ஆழமாக உள்நோக்கங்களைக் கொண்டிருக்கிறது. சிங்களவர்களின் நலன்களைக் காக்கும் வகையிலும் அதேவேளையில் இந்தியாவின் பிராந்திய நலன்களைக் காக்கும்வகையிலும் இந்த உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. விடுதலைபுலிகளுக்கோ, தமிழர்களுக்கோ, தெரியாமலும் அவர்களின் சம்மதம் பெறாமலும் இந்த உடன்பாடு தயாரிக்கப் பட்டது. ஜெயவர்த்தனாவை எல்லாவகையிலும் திருப்திசெய்து, இலங்கையைத் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதுதான் இந்தியாவின் நோக்கம். தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அடியோடு நசுக்க ஜெயவர்த்தனாவுக்கு ஒரு வாய்ப்பினை இந்த உடன்பாடு ஏற்படுத்தித் தந்தது. சமூக-பொருளாதார -அரசியல் ரீதியாகத் தமிழர்களை ஒடுக்குவதுதான் இந்த உடன்பாட்டின் அடிப் படை நோக்கமாகும். தமிழர்களுக்கு எதிராக இலங்கையரசு மேற்கொண்ட சகல நடவடிக்கைகளுக்கும் இந்தியஅரசு உடந்தையாக இருந்து ஒத்துழைப்புக் கொடுத்தது. இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான அமைதிப்படையாக இலங்கை சென்ற இந்திய இராணுவம் இலங்கை அரசின் கூலிப்படையாகவே இயங்கியது.

சிங்களவர்-தமிழர்-முஸ்லீம்களுக்கிடையே எவ்வித மோதலும் ஏற்படாமலும், சிங்களவர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே மோதல் ஏற்படாமலும் தடுப்பதே அமைதிப்படையின் நோக்கமாக இருந்திருக்கவேண்ணடும். இந்த நோக்கத்துடன் அமைதிப்படை அங்கு சென்றிருந்தால் கிழக்குமாநிலத்தில்தான் அது நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். சிங்களர்-தமிழர்-முஸ்லீம்கள் ஆகியோர் கணிசமாக வாழும் பகுதிகளில் அமைதிப்படை நிறுத்தப்பட்டு தங்கள் கடமையைச் செய்திருக்கவேண்டும். அதற்குமாறாக இந்திய ராணுவத்தின் பெரும்பகுதி வடக்கு மாநிலத்தில் குவிக்கப்பட்டது. வடக்குமாநிலம் முழுவதுமாகத் தமிழர் வாழும் பகுதி. அங்கு சிங்களவர்கள் இல்லை. எனவே அமைதிப்படைக்கு அங்கு வேலை இல்லை. ஆனால் விடுதலைப்புலிகள் எங்கெங்கு வலிமையாகயிருக்கிறார்களோ அங்கெல்லாம் அமைதிப்படை நிறுத்தப்பட்டது. எனவே இந்தியப் படையின் நோக்கத்தைக் குறித்துத் தமிழர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இரண்டாவதாக விடுதலைப்புலிகளிடம் ஆயுதங்களைப் பறிப்பதில் முனைப்பாகயிருந்த இந்தியராணுவம் அதேவேளையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போட்டிக் குழுக்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்தது. போட்டிக்குழுக்களைச் சேர்ந்தவர்களை வைத்து மூன்று நட்சத்திரப்படை என்ற பெயரில் ஒருபடையை உருவாக்கி இப்படையினர் நிராயுதப்பாணிகளான விடுதலைப்புலிகளையும் அவர்களுக்கு

ஆதரவளித்த அப்பாவிப் பொதுமக்களையும் வேட்டையாடத் தொடங்கினர். இந்தியராணுவத்தின் கண்ணெதிரிலும், அவர்களின் துணையோடும் மூன்று நட்சத்திரக் கும்பல் அட்டூழியங்களைப் புரிந்தது. இதுகுறித்து இந்திய இராணுவ அதிகாரிகளிடம் விடுதலைப்புலிகள் புகார் செய்தபோது அவர்கள் எத்தகைய நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கைப் பார்த்தனர்.

கிழக்குமாநிலத்தில் இலங்கையரசின் உதவியுடன் நடைபெற்ற சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க இந்தியராணுவம் தவறிவிட்டது. தமிழர்களே பெரும்பாலும் வாழும் முல்லைத்தீவு பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்த 13 ஆயிரம் தமிழர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள். அந்த இடத்தில் சிங்களவர்கள் குடியேற்றப் பட்டார்கள். இந்தியராணுவ அதிகாரிகளிடம் தமிழர்கள் இதுபற்றி முறையிட்ட போது இந்த அநீதியைத் துடைக்க இந்திய அதிகாரிகள் எதுவுமே செய்யவில்லை.

இதன்விளைவாக இந்தியஅரசுமீது தமிழர்கள் வைத்திருந்த நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது. இந்தியராணுவத் துணையுடன் போட்டிக்குழுக்கள் நடத்திய அட்டூழியங்கள் மக்களிடம் வெறுப்பையும், எதிர்ப்பையும் தோற்றுவித்தன. இந்தியராணுவம் தங்களைக் காப்பாற்றுவதற் காகவே வந்திருக்கிறது என நம்பிய தமிழர்கள் கொஞ்சம்கொஞ்சமாக உண்மை களை உணரத் தொடங்கினார்கள். இந்த அநீதிகளை எதிர்த்து அமைதியான வழியில் போராட ஈழத்தமிழர்கள் முடிவு செய்தார்கள். ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்கள் முதலியனவை நடத்தப்பட்டன. இந்த அறப்போராட்டங்களின் உச்சக்கட்டமாக திலீபன் சாகும்வரை உண்ணாவிரத மிருந்து உயிர் துறந்தான். தமிழ்மக்களின் மனக்கொதிப்பினை பிரதமர் ராஜீவ் உணரவில்லை. தீட்சித், இராணுவ அதிகாரிகள், 'ரா' உளவுத்துறை அதிகாரி கள் ஆகியோர் தெரிவித்த முற்றிலும் பொய்யான தகவல்களையே ராஜீவ் நம்பினார். 'ரா' உளவுத்துறை இதில் முக்கிய பங்கு வகித்தது. போட்டிக்குழுக் களின் துணையினால் விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்டிவிடலாம் என நினைத்து அது செயல்பட்டது.

இந்திய அரசு அரசியல்ரீதியாகவும், இராஜதந்திரரீதியாகவும் செய்த தவறு களின் விளைவாக இந்தியராணுவமும், விடுதலைப்புலிகளும் மோதிக்கொள்ள நேர்ந்தது. இந்தியஅரசு கீழ்க்கண்ட தவறுகளைச் செய்தது.

1. வெளிநாட்டுக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு இராணுவ பலத்தைப் பயன்படுத்தும்போது விகிதப் பொருத்தமான அளவைக் கடைப்பிடிக்க வில்லை.
2. கால-இட சூழலுக்கேற்றவகையில் நிர்ப்பந்த இராசதந்திரத்தை விடுதலைப் புலிகளிடம் பயன்படுத்திய விதத்தில் ஏற்பட்ட மோசமான தவறுகள்
3. விடுதலைப்புலிகள் பல்லாண்டுகாலமாக நடத்திவரும் கொரில்லாப் போரின் நோக்கம், பின்னணி, மக்களின் ஆதரவு ஆகியவற்றைப் புரிந்துகொள்ளாமல் அவர்களுடன் மோதிக்கொண்டது.
4. விடுதலைப்புலிகளுடன் ஏற்பட்ட போரை முடிக்கும்வகை தெரியாமல் திண்டாடுவது.

கடந்தகாலத்தில் இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கை என்பது முழுமை வாய்ந்ததாகவும், உண்மையான அரசியல்-இராசதந்திர அணுகுமுறைகளைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. இந்த வெளிநாட்டுக் கொள்கையானது காந்திய இலட்சிய நோக்கத் துடனும், நேருவின் விரிந்த உலகப் பார்வையுடனும் அமைந்து ஒழுக்கரீதியான செயற்பாடுகளையும் கொண்டிருந்தது. ஆனால் தற்போது இலட்சியத்தையடைவதற்காக எத்தகைய வழிமுறைகளையும் கையாளலாம் என்ற நிலைக்கு நமது கொள்கை சிதைக்கப்பட்டு விட்டது.

ஸ்ரீலங்கைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் இந்திராகாந்தியின் காலத்தில் நமது நோக்கம் என்பது ஈழத்தமிழர்களுக்கு உரிமையைப் பெற்றுத்தந்து அதன் மூலம் இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பாதுகாப்பது என்பதாக இருந்தது. ஆனால் இப்போது ராஜீவ் காந்தியின் காலத்தில் சிங்கள மக்களைத் திருப்திப் படுத்த ஈழத்தமிழர்களைப் பலி கொடுத்து இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பாதுகாப்பது என்பதாகிவிட்டது. இலங்கையில் உள்ள தமிழர்கள் இந்தியாவைத் தங்கள் பாதுகாவலனாகக் கருதினார்கள். சிங்களர்கள் இந்தியாவைத் தங்களது விரோதிநாடாகப் பாவித்தார்கள். ஆனால் இப்போது சிங்களவர்களோடு தமிழர்களும் இந்தியாவை தங்களுக்கு விரோதமாகப் பாவிக்கும் நிலைமை ராஜீவும் இந்திய இராணுவமும் ஏற்படுத்திவிட்டனர்.

இலங்கையில் தனது இலக்கை அடைவதற்குத் தேவையான இராணுவப் பலத்தைவிட பலமடங்கு அதிகமான இராணுவப்பலத்தைத் தமிழர்களுக்கு எதிராக இந்தியா பயன்படுத்திவிட்டது. வியட்நாம் பற்றிய அமெரிக்காவின் போர்க்கொள்கைக் குறித்துக் கூறப்பட்ட பல்வேறு புகார்களில் தேவைப்பட்ட விகித அளவுக்கு மேல் பல மடங்கு அதிகமான இராணுவப் பலத்தை அமெரிக்கா பயன்படுத்தியது என்பது முக்கியமானதாகும். வியட்நாமில் அமெரிக்காவின் நலன்களைப் பாதுகாக்கத் தேவையான இராணுவத்தைவிட பலமடங்கு அதிக மான இராணுவத்தைப் பயன்படுத்தி, பலமடங்கு அதிகமாக அழிவை உருவாக்கி, பலமடங்கு அதிகமான எதிர்ப்பை அமெரிக்கா சம்பாதித்துக் கொண்டது. அமெரிக்காவின் கொள்கைகளை ஆதரிப்பவர்கள் கூட இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். அதைப்போலவே தமிழீழத்தில் தேவைக்கு அதிகமான இராணு வத்தைப் பயன்படுத்தி பெருமளவு அழிவை ஏற்படுத்தி தமிழர்களின் ஒட்டு மொத்தமான எதிர்ப்பை இந்தியா சம்பாதித்துக்கொண்டது.

ஈழமக்களுக்கு விமானம் மூலம் உணவுப்பொட்டலங்களைப் போட்டதின் மூலமும், மத்திய அமைச்சர் தினேஷ்சிங்கை நேரடியாக அனுப்பி மிரட்டியதன் மூலமும் ஜெயவர்த்தனாவை மிரட்டி உடன்பாட்டிற்கு ஒப்புக்கொள்ளவைக்க இந்தியாவினால் முடிந்தது. ஆனால் அந்த மிரட்டல் இராசதந்திரம் பிரபா கரனிடம் பலிக்கவில்லை. எனவே அவரை இராணுவப் பலத்தைக் கொண்டு ஒடுக்கிவிடலாம் என்று இந்தியா நினைத்தது. இந்தியாவின் அந்த அறைகூவலை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொண்டு உறுதியாக எதிர்த்துப் போராடி வருகிறார் கள். கிட்டத்தட்ட இரண்டாண்டு காலமாகியும் கூட விடுதலைப்புலிகளைப் பணியவைக்க இந்தியாவினால் முடியவில்லை. இப்போது இந்தியாவுக்கு முன்னுள்ள வழிகள் இரண்டேதான்.

1. உடனடியாகப் படைகளை வாபஸ்பெற்று விடுதலைப்புலிகளுக்கும், பிரேமதாசாவுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தை வெற்றி பெற உதவுவது.
2. படைகளை வாபஸ்பெற மறுத்து, தொடர்ந்து போரைநடத்தி, அதன் மூலம் இலங்கை அரசின் எதிர்ப்பையும், உலகநாடுகளின் கண்டனத் தையும் சந்திப்பது.

இந்த இரண்டில் எதையும் செய்யமுடியாமல் ராஜீவ்காந்தி தவிக்கிறார். 1965ஆம் ஆண்டில்' அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த லிண்டன் ஜான்சன் வியட்நாம் போராட்டத்தை ஒடுக்க தன்னுடைய முழுவிமானப்படை பலத்தைப் பிரயோகித்துப் பார்த்தும் அவரால் வெற்றிபெறமுடியவில்லை. அவருக்கு ஏற்பட்ட தோல்வி ராஜீவ்காந்திக்கும் ஏற்பட்டுவிட்டது என்பதில் சந்தேகம் இல்லை. சேற்றுக்குழிக்குள் சிக்கிய யானையின் கதிதான் இந்திய இராணுவத் திற்கு ஏற்பட்டுள்ளது.

# 4. போர்க் கொடுமைகள்

இந்தியாவிலிருந்து ஒருலட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் தமிழீழப் பகுதியில் குவிக்கப்பட்டனர். இவர்களுக்கு உதவியாக டாங்கிப்படை, விமானப்படை, கடற்படை ஆகியவையும் களத்தில் இறங்கின. அமைதிப்படையாகச் செயல்பட வேண்டியவர்கள் போர் வெறியர்களாக மாறி ஈவிரக்கமின்றி தமிழர்களை வேட்டையாடினார்கள் மனித உரிமைகள் அடியோடு மீறப்பட்டன. விவரிக்கமுடியாத அட்டூழியங்கள் தங்குதடையின்றி நடத்தப்பட்டன. இவற்றை எதிர்த்த மக்கள் மேலும் மேலும் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். மக்களின் எதிர்ப்பு வலுக்கவலுக்க இந்தியராணுவத்தின் மனித உரிமை மீறல்களும் அட்டூழியங்களும் அதிகரித்தன.

சர்வதேசப் பொதுமன்னிப்புச் சபை, ஐ.நா. மனிதஉரிமைக் குழு போன்றவற்றில் இந்திய ராணுவத்திற்கு எதிரான புகார்கள் செய்யப்பட்டன. இந்தப் புகார்களின் உண்மைகளை ஆராய்ந்த இந்த அமைப்புக்களும், இந்திய ராணுவத்தின் செயலினைக் கண்டித்தன. ஐ.நா. மனித உரிமைக் கமிஷனின் 45-வது கூட்டம் நடைபெற்றபோது இந்தியராணுவத்தின் மனித உரிமை மீறல் குறித்து அக்கூட்டத்தில் புகார் செய்யச்சென்ற உலகத்தமிழர் கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் இந்தியத் தூதுக்குழுவைச் சேர்ந்த ஆலோசகர்களில் ஒருவர் பின்வருமாறு கூறினார். 'இன்னும் இரண்டொரு வாரங்களில் இந்திய ராணுவம் இலங்கையிலிருந்து வாபஸ் ஆகிவிடும் என்றார்', ஐ.நா. மனித உரிமைக்குழுவிலும் மற்றும் சர்வதேச அமைப்புகளிடமும், வெளிநாட்டுச் செய்தியாளர்களிடமும் இந்திய ராணுவ அட்டூழியங்கள் பற்றி புகார் கூறுவதைத் தடுக்கவே இவ்வாறு ஒரு பெரும் பொய்யை அந்த ஆலோசகர் கூறினார் என்பது பின்னர் தெரிந்தது.

> *1987 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைக்குழு "இலங்கையின் வடக்கு-கிழக்கு மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்து வருமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை ஏகமனதாக வேண்டிக்கொண்டது" ஆனால் செஞ்சிலுவைக்குழு தமிழர்பகுதிகளில் நுழைவதற்கு அனுமதி தர இந்திய ராணுவம் மறுத்துவிட்டது.*

உடன்பாடு கையெழுத்தானபிறகு இன்றுவரை சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்திய ராணுவத்தினாலும் அவர்களது கைக்கூலிகளினாலும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பல நூறு கோடி ரூபாய் பெறுமான தமிழர்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் இந்திய ராணுவத்தினால் கற்பழிக்கப்பட்டிருக்கின்றனர். சுமார் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இந்திய ராணுவ சிறைமுகாம்களில் இன்னமும் சித்திரவதையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கைதுசெய்யப்பட்ட பல நூற்றுக்கணக்கானவர்களின் கதி என்னவாயிற்று? என்பதே தெரியவல்லை. அமைதியை நிலவச் செய்வது என்ற பெயரில் இந்தியராணுவம் செய்த இந்த அட்டூழியங்கள் எந்த அதிகாரத்தினால் செய்யப்பட்டன? இலங்கை அரசியல் சட்டத்தின்படியா? அல்லது இந்திய அரசியல் சட்டத்தின்படியா? அல்லது சர்வதேசச் சட்டங்களின்படியா? எந்த அதிகாரத்தின்படி இந்தியராணுவம் இவ்வாறு செய்தது? உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் யாரும் இலங்கைத் தமிழர் பகுதியில் சுதந்திரமாகச் சுற்றுப்பயணம்செய்து செய்திகளைச் சேகரிக்க இதுவரை அனுமதிக்கப்படவில்லை. இந்திய-இலங்கை வானொலிகளும், தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும் இந்த அட்டூழியங்களை மூடிமறைத்தன. விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் திட்டமிட்டுப் பொய்ப்பிரச்சாரம் செய்தன.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியக் கடற்படை எப்படி விமானங்களையும், ஏவுகணைகளையும், ராக்கெட்டுகளையும் வெற்றிகரமாகப் பயன்படுத்தியது என்பதை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தனது 31.5.'89 இதழில் வெளியிட்டுள்ளது. ''1987 ஆம் ஆண்டின் இறுதி மூன்றுமாதகாலத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் மற்றும் ஏவுகணைகளை ஏந்திவருகிற படகுகளுக்கு எதிராக அலைஜ் விமானங்கள் உபயோகிக்கப்பட்டன. இந்த விமானங்களிலிருந்து வீசப்பட்ட ராக்கெட்டுகளின் மூலம் 60க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகளின் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. 250க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் இதில் கொல்லப்பட்டார்கள். (ஆனால் உண்மையில் இவர்களில் பெரும்பாலோர் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த அப்பாவி மீனவர்களாகும்). இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான விமானத் தாங்கிக் கப்பலான விக்ராந்த் என்னும் போர்க்கப்பலிலிருந்துதான் இந்த விமானங்கள் புறப்பட்டுச் சென்றன. அலைஜ் விமானங்கள் நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டு பிடித்து வேட்டையாடும் விசேஷத் தன்மைகொண்டவையாகும். இந்தியக் கடற்படையிடம் இத்தகைய விமானங்கள் 17 உள்ளன. இந்தவிமானங்களில் டார்ப்பிடோ குண்டுகளும், ராக்கெட்டுகளும் பொருத்தப்பட்டிருக்கும். வானத்திலிருந்து தரையைத் தாக்கும் ஏவுகணைகளும் இந்தவிமானத்தில் உண்டு. தன்னிடம் உள்ள அத்தனை விமானங்களையும் விடுதலைப்புலிகளுக்கு எதிராகக் கடற்படை பயன்படுத்தியது. இந்தியக் கடற்படையைச் சேர்ந்த 4 போர்க்கப்பல்கள், ஒரு நீர்மூழ்கிக்கப்பல், கடற்படை விமானங்கள் ஆகியவையும் இப்போரில் ஈடுபட்டன. போருக்கு மேலும் மேலும் இந்தியப் படைகள் அனுப்பப்பட்டபோது பெரும்பாலானவர்கள் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள்மூலமே அனுப்பப்பட்டார்கள்.

> கொரியாப் போருக்குப்பிறகு கடல்வழியாக இவ்வளவு அதிகமான படைகள் கொண்டு செல்லப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

இந்தியராணுவத்தின் அட்டூழியங்கள் குறித்து தவ்லீன் சிங் என்பவர் இந்தியன் எக்ஸ்பிரஸ்' 1.6.'89 இதழில் எழுதியுள்ள கட்டுரையில் பின்வரும் உண்மைகளைக் குறிப்பிட்டிருக்கிறார். இவர் இந்திய ராணுவத்தினால் அழைத்துச் செல்லப்பட்ட பத்திரிகையாளர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. ''சில வேளைகளில் யதார்த்த நிலைமைகளை நாம் வேண்டுமென்றேகூட புரிந்து கொள்ள மறுத்துவிடுகிறோம். 1987 அக்டோபரில் யாழ்ப்பாணத்தை இந்திய ராணுவம் கைப்பற்றியபோது அங்கு அழைத்துச்செல்லப்பட்ட பத்திரிகையாளர்களுடன் நானும் சென்றிருந்தேன். நாங்கள் சென்றிருந்த சமயம் சண்டை என்னவோ ஓய்ந்துவிட்டதுதான். ஆயினும் அங்கு ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தது. தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன. இந்திய அமைதிப்படை முகாம்களிலிருந்து மருந்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களைத் தவிர ஏனையோருக்கு அங்கு போதிய பாதுகாப்பு இருக்கவில்லை. நாங்களும் அன்று மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டோம். அங்கு கை, கால்கள் உடைந்து, முடமான துப்பாக்கிச் சூடுபட்ட பெண்கள், குழந்தைகளைக் கண்டோம். நாம் காணக்கூடியதாக இருந்த இலங்கையர்களே அவர்கள்தான். அவர்களும் இந்திய ராணுவத்தின் குண்டுவீச்சினால்தான் தாங்கள் காயப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் இந்திய ராணுவமோ தாங்கள் குண்டுவீசியதை அடியோடு மறுத்து விட்டது. ஹெலிகாப்டர்களில் இருந்து இந்திய ராணுவம் குண்டுவீசித் தாக்கியது என்பதை இந்தியச் செய்தியாளர்கள் ஆதாரங்களுடன் தகவல் வெளியிடும்வரை அதைப்பற்றி எந்தச் செய்தியும் வெளியாகியிருக்கவில்லை.

## புலிகளை அழிக்க நடவடிக்கை

இந்திய-இலங்கை ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுமுன் இலங்கையில் சிங்களராணுவக் கைவரிசைகள் குறித்து இந்திய அரசாங்கமும், பத்திரிகைகளும் எழுப்பிய கண்டனக்குரல்கள் ஏராளம். ஆனால் ஒப்பந்தத்துக்குப்பிறகு அதே

அத்துமீறல்களை இந்தியப் படைகள் செய்தபோது அதைப்பற்றி எவருமே மூச்சு விடவில்லை. இதனால்தான் இலங்கையில் இந்தியப்படைகளின் கொடுமைகளை சர்வதேச மனித உரிமைகள் குழு தனது அறிக்கையில் பட்டியலிட்டிருந்தபோது எவருமே அவற்றைப் பொருட்படுத்தவில்லை. விடுதலைப்புலிகளை அழிக்க என்னென்ன முயற்சிகளை இந்தியப் படையினர் மேற்கொண்டனர் என்பது குழுவின் அறிக்கையில் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளது. இலங்கையில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி நாம் தொடர்ந்து கண்ணைமூடிக்கொண்டு இருந்தால் நாளை நமக்குத்தான் பழி வந்து சேரும்.

இலங்கையில் ஜே.வி.பி. தீவிரவாதிகளை ஒடுக்க சிங்களராணுவமும் விடுதலைப்புலிகளை முறியடிக்க இந்திய ராணுவமும் கையாளும் முறைகள் சர்வதேச மனித உரிமைகள் குழு அறிக்கையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டு இராணுவங்களின் சித்திரவதை நடைமுறைகளில் அதிக வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான மக்கள் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு புலிகளுடன் அவர்களுக்குத் தொடர்பு உண்டா இல்லையா என்பது குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். புலிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள் நூற்றுக்கணக்கானோர் இந்தியப்படைகளின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இலங்கையின் சட்டத் திட்டங்களின்படியா அல்லது இந்தியச் சட்டத்தின் கீழா விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவில்லை. இந்திய அமைதிகாப்புப் படையும் அதைப்பற்றிச் சொல்லவில்லை. தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு எதிராக எந்தக் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கும் தொடரப்படவில்லை.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோரும் பலவித சித்திரவதைகளுக்கு, இலக்காகிறார்கள். இறந்தும்விடுகிறார்கள். இதற்கு உதாரணமாக 1988 பிப்ரவரி நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் பாரடைஸ் ஓட்டல் வளைவில் வைத்துக் கைது செய்யப்பட்டு தொடர்ந்து இந்தியப்படையின் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒரு நபர் கூறியவற்றை குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அந்த மனிதர் என்ன கூறியிருக்கிறார் என்று பாருங்கள்:

''பிப்ரவரி 18ஆம் தேதி இரவு பத்தரை மணிக்கு நான் கைது செய்யப்பட்டேன். எனது கைகள் சேர்த்துக்கட்டப்பட்டன. பின்னர் ஜன்னல் கம்பிகளோடு சேர்த்துக் கட்டப்பட்டேன். எனது ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டேன். எனது உடம்பில் மின்சாரம் பாய்ச்சப்பட்டது. பாதங்களை இந்தியவீரர் ஒருவர் தனது சப்பாத்துக் காலால் மிதித்துக்கொண்டார். டெலிபோன் மாதிரியிருந்த ஒரு கருவியில் இருந்து ஒருவர் என் உடம்பில் அவ்வப்போது மின்சாரம் பாய்ச்சினார். எனது தொப்புளிலும், ஆணுறுப்பிலும் இரு கம்பிகள் சொருகப்பட்டு மின்சாரம் பாய்ச்சப்பட்டது. இருமுறை மின்சாரம் பாய்ச்சப்பட்டது. ஒவ்வொருமுறையும் அறிவு மயங்கினேன். அது தெளிந்ததும் என்னை சிப்பாய்கள் மாறி மாறி அடித்தாகள்.''

## காவலில் இறந்த இளைஞர்

ஜூடோ சந்திரகுமார் சக்காரியாஸ் என்ற 17 வயது இளைஞர் இந்திய ராணுவத்தின் காவலில் இருந்தசமயம் செத்துப்போனார். யாழ்ப்பாணம் கதீட்ரலைச் சேர்ந்த இந்த இளைஞர் 1988 நவம்பர் 26ஆம் தேதி கைதானார். கதீட்ரல் வளவில் இரு போராளிகள் குழுக்களுக்கிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையின் பின் இந்த இளைஞர் பிடிக்கப்பட்டார். அன்று இரவு ஒன்றரை மணியளவில் யாழ் ரயிலடிக்கு அழைத்துச் செல்லப்பட்ட இவரை மறுநாள் விடியற்காலை ஐந்தரை மணியளவில் யாழ் ரயில் நிலைய மேடையில் சிலர் பிணமாகத்தான் கண்டிருக்கிறார்கள். அந்தப்பிணத்தைத் தரும்படி உறவினர்கள்

கேட்டதற்கு அவர்களை மறுநாள் வரும்படி இந்தியப்படையினர் கூறி அனுப்பியுள்ளனர். ஆனால் மறுநாள் சந்திரகுமாரின் சடலம் அவரது வீட்டிற்கு அருகில் கிடந்தது. உடம்பில் பல துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தன.

## திரீ ஸ்டார் கைங்கர்யம்

இந்தியராணுவம் ''சிறைப்பிடிக்கும்'' நபர்களை சுட்டுக்கொல்லும் 'திரீ ஸ்டார்ஸ்' பற்றியும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திரீ ஸ்டார்ஸ் இந்தியப் படையின் நிழலாகச் செயல்படுபவர்கள். இவர்களால் பலர் தெரு விளக்குக் கம்பங்களில் கட்டப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தியப்படையினரால் கைது செய்யப்படுவோரில் அனேகர் 'காணாமல்' போய்விடுவதாகவும் அறிக்கை கூறுகிறது. 1988 ஜுன் மாதத்திலிருந்து அப்படி 72 பேரைக் காணவில்லை, எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது இவர்களில் அனேகர் சித்திரவதைத் தாங்காமல் இறந்துபோயிருக்கலாம் என்றே கருதப்படுகிறது.

சர்வதேச மனித உரிமைகள் குழு விஷயத்தில் இந்திய அரசின் நிலைப்பாடு சற்று குழப்பமாக உள்ளது. தென்னாப்பிரிக்க, லத்தின் அமெரிக்க, நிலைமைகளைப்பற்றி குழு கூறினால் நாம் ஆர்வத்தோடு வரவேற்கிறோம். ஆனால் பஞ்சாப், இலங்கை நிலவரங்களைப் பற்றிப் பேசினால் கண்டுகொள்ள மறுத்து விடுகிறோம்.

இந்திய அமைதிப்படையைப் பற்றி மனித உரிமைகள்குழு கூறுவதை நாம் அலட்சியப்படுத்திவிடலாம். ஆனால் உலகமும் அவ்வாறு செய்யும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.''

இந்திய ராணுவத்தின் அட்டூழியங்கள்குறித்து மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. 1988ஆம் ஆண்டு மே 1ஆம் தேதி இலண்டனில் நடைபெற்ற 'உலகத்தமிழர் மாநாட்டில்' பேசிய பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் பின்வரும் குற்றச்சாட்டுகளைப் பகிரங்கமாகக் கூறினார்: 'இந்திய ராணுவம் தயாரித்துள்ள சில புதிய ஆயுதங்களை முதல் தடவையாக யாழ்மக்கள்மீது பிரயோகித்துச் சோதனைச் செய்தது. இதன்விளைவாக யாழ்ப்பாணத்தில் சேதம் அதிகமாக இருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தார்கள். நகரத்தின் கணிசமான பகுதி அடியோடு அழிந்தது' இந்தியாவின்மீது இத்தகைய குற்றச்சாட்டைச் சுமத்தியிருப்பவர் சாதாரணமானவர் அல்ல. ஈழத்தந்தை என்று போற்றப்படும் தந்தை செல்வநாயகம் அவர்களின் மருமகன் ஆவார். கனடாவிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் அரசியல்துறைப் பேராசிரியராக அவர் பணியாற்றி வருகிறார். இந்த மாநாட்டில் இவ்வாறு அவர் கூறியதை நானே நேரில்கேட்டேன். மாநாட்டிற்குப்பின்னர் அவருடன் தனியாக நான் உரையாடியபோதும் இந்தக் குற்றச்சாட்டை அவர் உறுதிசெய்தார். ஆனால் அவரின் இந்தக் குற்றச்சாட்டுக்கு இந்திய அரசாங்கம் இதுவரை பதிலளிக்க முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொரில்லாப் போர்முறையில் பயிற்சியும் அனுபவமும் பெறுவதற்காக இளம் இந்திய வீரர்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு வவுனியா பகுதிகளில் விடுதலைப்புலிகளை ஒழிப்பதற்காக ஏவிவிடப்பட்டனர். இஷ்டப்படி தமிழர்களைச் சுட்டுத்தள்ளவும் தமிழ்ப் பெண்களைக் கற்பழிக்கவும் இவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். இந்திய ராணுவ வீரர்கள் அனுபவம் பெறுவதற்காகத் தமிழர்கள் பலிகடாவாக்கப்பட்டார்கள்.

# 5. விடுதலைப்புலிகளின் வலிமைக்குக் காரணம் என்ன?

யாழ்நகரைச் சுற்றிவளைத்துக்கொண்டு பிரபாகரனையும் மற்ற தளபதிகளையும் கைது செய்யவும், விடுதலைப்புலிகளை அடியோடு அழிக்கவும் இந்திய ராணுவம் வகுத்த போர்த்திட்டத்திற்கு பவான் என்ற புனைப் பெயரைச் சூட்டியது. பவான் என்றால் பலமான காற்று என்று பொருள். அதேநேரத்தில் தமிழர்களைக் குறிக்கும் சொல்லாக இந்திய ராணுவ அதிகாரிகள் பனைமரம் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்கள். அதாவது தமிழர்கள் பனையேறிகள் என்ற பொருளில் ஏளனமாகக் குறிப்பிட்டார்கள். பலமான காற்று வீசினால் பனைமரம் நாணலைப்போல வளைந்துகொடுக்காது. நிமிர்ந்து நிற்கும். ஆனால் சிறிதுநேரத்தில் முறிந்து கீழே விழுந்துவிடும் என்று இராணுவ அதிகாரிகள் கருதிதான் தங்களின் இராணுவத் திட்டத்திற்குப் பவான் என்று பெயரிட்டார்கள். ஆனால் இந்திய ராணுவப் புயல் காற்றுக்கு ஈடுகொடுத்து விடுதலைப் புலிகள் என்னும் தமிழ்ப் பனைமரம் உறுதியாக தலை நிமிர்ந்து நின்றது.

யாழ்ப்பாணத்தில் இந்தியராணுவத்தை எதிர்த்து விடுதலைப்புலிகளும், ஈழமக்களும் நடத்திய வீரஞ்செறிந்த போராட்டத்தை ஸ்டாலின்கிராடு நகர மக்களும், செஞ்சேனையும் ஹிட்லரின் நாஜிப்படையை எதிர்த்துப் போராடியதற்கு ஒப்பிடலாம். எதிர்காலத்தில் உண்மையான வரலாறு எழுதப்படும் போது இந்தப்போராட்டம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்தப்போரில் பெருமளவில் இந்தியராணுவம் ஈடுபட்ட போதுகூட யாழ்ப்போராட்டம் ஒருமாதக்காலத்திற்குமேல் நீடித்தது. இந்திய ராணுவம் பலத்த சேதத்திற்கு ஆளானது. ஏராளமான இராணுவ அதிகாரிகள் பலியானார்கள். இந்த ஆத்திரத்தில் கண்மூடித்தனமாக இந்திய ராணுவம் விமானங்களிலிருந்தும், பீரங்கிகள்மூலமும் குண்டுமழை பொழிந்தது. ஆனாலும் அவர்களால் யாழ்ப்பாணத்தை இன்னமும் தங்களின் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியவில்லை.

இந்திய-இலங்கை உடன்பாட்டில் கொடுக்கப்பட்ட 120 மணிநேர அவகாசமும், பவான் போர்த்திட்டமும் ஒரு உண்மையை எடுத்துக்காட்டுகின்றன. குறுகியகால அவகாசத்தில் விடுதலைப்புலிகளைச் சுலபமாக ஒடுக்கிவிட முடியுமென இந்திய ராணுவ அதிகாரிகள் நினைத்திருந்தார்கள் என்பது அம்பலமானது.

யாழ்ப்போரின் முடிவில் பிரபாகரனும், மாத்தையாவும் மற்ற தளபதிகளும், விடுதலைப்புலிகளும் பத்திரமாகத் தப்பிச்சென்றுவிட்டார்கள் என்பதும், அதே வேளையில் 17 இந்திய இராணுவ வீரர்களைச் சிறைப்படுத்திச் சென்றார்கள் என்பதும் எல்லோரையும் திகைக்கவைத்தது. குப்புறவிழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பழமொழிக்கேற்ப யாழ்ப்போர் முடிந்தபிறகு விடுதலைப் புலிகளின் முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்டதாகவும் விரைவில் அவர்கள் சரணாகதியடைவார்கள் எனவும் இந்திய ராணுவ அதிகாரிகள் அறிவித்தனர்.

எவ்வளவு அப்பட்டமான பொய்யை அவர்கள் கூறுகிறார்கள் என்பதை விடுதலைப்புலிகள் ஒரு நிகழ்ச்சியின் மூலம் நிரூபித்தனர். விடுதலைப்புலிகளின் துணைத்தலைவர் மாத்தையா போரில் கொல்லப்பட்டுவிட்டதாகவும், அதனால் ஆத்திரமடைந்த விடுதலைப்புலிகள் தாங்கள் கைதுசெய்த 17 இந்திய இராணுவ வீரர்களை உயிரோடு கொளுத்திவிட்டதாகவும் இந்திய அரசு இடைவிடாமல் செய்த பொய்ப்பிரச்சாரத்தை இந்நிகழ்ச்சியின் மூலம் அம்பலப்படுத்தினார்கள். இந்திய ராணுவத்தினால் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்ட மாத்தையா 17 இந்திய இராணுவ வீரர்களையும் உயிரோடு அழைத்துவந்து சர்வதேசப் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் அவர்களை விடுதலை செய்துவிட்டு வந்தவழியே மறைந்தும்போனார். இந்திய ராணுவ அதிகாரிகளின் பொய்ப்பிரச்சாரத்திற்கு

இந்த நிகழ்ச்சி ஆப்புவைத்தது. யாழ்நகரில் இருந்து வெற்றிகரமாக வெளியேறி னாலும் இன்னமும் யாழ்நகரில் விடுதலைப்புலிகள் இயங்கிதான் வருகிறார்கள். யாழ்நகர வீழ்ச்சிக்குப்பிறகுத் தங்கள் போர்த் தந்திரத்தை விடுதலைப்புலிகள் மாற்றிக்கொண்டார்கள். கொரில்லாப் போர்முறையைத் தொடங்கினார்கள். கடந்த 1 1/2 ஆண்டு காலத்திற்குமேலாக கொரில்லாப் போர்முறைமூலம் இந்திய ராணுவத்தைத் திக்குமுக்காட வைத்து வருகிறார்கள். இந்திய-இலங்கைக் கடற்படைகள் கூட்டாக இலங்கைக் கடற்கரையைக் காவல் காத்தபோதிலும் அவற்றை ஊடுருவிச்சென்று புதிய புதிய ஆயுதங்கள் விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்தவண்ணம் இருந்தன. நூற்றுக்கணக்கான புலிகள் போரில் வீரமரண மடைந்தபோதிலும் மேலும் மேலும் புதிதாகப் பயிற்சிபெற்ற இளைஞர்கள் போரில் குதித்தனர். விடுதலைப்புலிகளில் விடுதலை வேட்கை, போராடும் திறன், தியாக உணர்வு மக்களுக்கும் அவர்களுக்கும் இடையேயுள்ள மிக நெருக்கமான உறவு ஆகியவற்றைக்குறித்து இந்திய அரசு குறைவாக மதிப்பிட்டுவிட்டது.

வியட்நாமில் அமெரிக்கப்படையும், ஆப்கானிஸ்தானத்தில் சோவியத் படையும் பல ஆண்டுகாலம் அவதிப்பட்டதைப்போல, இலங்கையில் இந்தியப் படை அவதிப்படப்போகிறது என்று சொல்லப்பட்டதை இந்தியா நிராகரித்தது. வெகுவிரைவாகப் புலிகளை ஒடுக்கி அவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்து தமிழர்களுக்கு உரிமைகள் பெற்றுத்தந்து எவ்வளவு விரைவாக அங்கிருந்து வெளியேறமுடியுமோ அவ்வளவு விரைவாக இந்தியப் படைகள் வெளியேறும் என அறிவித்தது. ஆனால் இந்திய அரசு திட்டமிட்டபடி எதுவும் நடக்கவில்லை. தொடர்ந்து இராணுவ நிர்ப்பந்தங்கள் மூலமும், அரசியல் நீதியாக ஓரங் கட்டுவதின்மூலமும் புலிகளைப் பணியவைக்கமுடியுமென்று இந்தியா நம்பியது.

ஆனால் இதற்கு நேர் எதிர்மாறான விளைவுகள் ஏற்பட்டன. விடுதலைப் புலிகளின் நோக்கங்களும், போர்முறைகளும் இந்திய ராணுவத்தின் நோக்கங் களுக்கும் போர்முறைகளுக்கும் முற்றிலும் வேறுபட்டவைகளாகும்.

ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட ஒருபோராட்டமாக இப்போராட்டத்தை இந்திய ராணுவம் கருதியது. ஆனால் விடுதலைப்புலிகள் இதை அவ்வாறு கருத வில்லை. எந்த வரையறைக்குள்ளும் அடக்கமுடியாத ஒருபெரும் போராட்டமாக இதைக் கருதினார்கள்.

மிக நவீன ஆயுதங்களை வைத்துக்கொண்டிருக்கும் இந்திய ராணுவம் இப்போராட்டத்தில் தன்னுடைய இழப்பு மிகச் சொற்பமாகவே இருக்கும் என்று கருதியது. விடுதலைப்புலிகளோ இப்போராட்டத்தில் தோற்றால் எல்லையற்ற இழப்பு ஏற்படும் என்று கருதினார்கள்.

அந்நியநாட்டு அரசு ஒன்றுக்காக நமக்கு சம்பந்தமில்லாத ஒருபோரில் நாம் ஈடுபட்டிருக்கிறோம் என்ற உணர்வுடன் இந்திய ராணுவம் போரில் ஈடுபட்டது. ஆனால் விடுதலைப்புலிகளோ தங்கள் மண்ணை மீட்பதற்காகவும், தங்கள் மக்கள் சுதந்திரம்பெற வேண்டும் என்பதற்காகவும் தங்களுடைய எதிர்காலமே சோதனைக்குள்ளாகியிருக்கிறது என்ற உணர்வுடனும் போராடுகிறார்கள்.

இந்திய ராணுவத்தை ஆக்கிரமிக்க வந்த அந்நிய ராணுவம் என்று ஈழத் தமிழர்கள் கருதுவதால் இந்த இராணுவத்துடன் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். ஆனால் விடுதலைப்புலிகளைத் தங்களுக்காகப் போராடும் தங்களின் வீரமிக்கப் புதல்வர்கள் என்று கருதி அவர்களுக்கு சகல உதவிகளையும் செய்கிறார்கள்.

இப்போரில் ஈடுபட்டுள்ள இந்திய ராணுவத்திற்கு எதற்காகப் போராடு கிறோம் என்பதும் தெரியாது. எந்த இலக்கையடைய போராடுகிறோம் என்பதும் புரியவில்லை. ஆனால் விடுதலைப்புலிகள் தெளிவான இலக்கை நோக்கி உறுதி யுடன் போராடுகிறார்கள்.

இதன்காரணமாகத்தான் விடுதலைப்புலிகள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் அவர்கள் வெற்றிபெறுகிறார்கள். எண்ணிக்கையில் பலமடங்கு

அதிகமாக இருந்தாலும் இந்திய ராணுவத்தினால் எதுவும் செய்யமுடியவில்லை. உலகத்தில் நான்காவது பெரிய இராணுவமான இந்திய ராணுவத்தை முழுமையாகத் தோற்கடித்துவிடமுடியாது என்பதைப் புலிகள் நன்றாகவே அறிந்திருக்கிறார்கள். ஆதலால் கொரில்லாப் போர்முறையை கையாண்டு இந்திய ராணுவத்திற்குப் பெரும் சேதங்களை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களின் விளைவாகவும் மற்ற போராளிக் குழுக்களின் மக்கள் விரோத நடவடிக்கைகளின்விளைவாகவும் இந்திய ராணுவம் தமிழ்மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கிறது. இதன்விளைவாக விடுதலைப் புலிகளின் வேலை மிகவும் சுலபமாகிவிட்டது. அவர்களுடன் மக்கள் முழுமையாக ஒத்துழைக்கின்றார்கள்.

இந்தப் போராட்டம் நீடிக்க நீடிக்க இராணுவரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் விடுதலைப்புலிகள் வேகமாகச் செயல்படமுடிகிறது. இதன் மூலம் மக்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சியையும், விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான உறுதியையும் மேலும் வளர்க்க முடிந்திருக்கிறது. இந்திய ராணுவத்தின் கைப்பாவையாக விளங்கும் மாகாண அரசுக்கு எதிராக மக்களின் ஒருமித்த எதிர்ப்பையும் விடுதலைப்புலிகளால் திரட்டமுடிந்திருக்கிறது. எல்லாவற்றுக்கும்மேலாக விடுதலைப்புலிகளின் இடைவிடாத திடீர் தாக்குதல்களின் விளைவாக இந்திய ராணுவவீரர்களின் மனவுறுதி குறைந்திருக்கிறது. தங்கள் நாட்டிற்குச் சம்பந்தமில்லாத தேவையற்ற ஒரு போரில் நாம் ஈடுபட்டிருக்கிறோம் என்று அவர்கள் பெரும் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். அதிகப்பட்சமான அளவுக்குப் பணம், ஆயுதங்கள், மனித சக்தி ஆகியவற்றை இந்திய அரசு இலங்கையில் வீண்விரயம் செய்து கொண்டிருப்பதாக இந்திய மக்களிடையேயும் அதிருப்தி பரவத்தொடங்கியிருக்கிறது. அதேவேளையில் ஈழத்தமிழர்கள் நடுவில் புலிகளுக்கான ஆதரவு நாளுக்குநாள் பெருகிவருகிறது. அவர்களுக்கு மக்கள் அள்ளி அள்ளித் தந்து உதவுகிறார்கள். இப்போராட்டத்தை ஒரு மக்கள் போராட்டமாக மாற்றுவதில் விடுதலைப்புலிகள் வெற்றிபெற்றிருக்கிறார்கள்.

சுதந்திரம்பெற்றபிறகு முதல் தடவையாக இத்தகைய விடாப்பிடியான போரில் இந்தியா சிக்கிக்கொண்டுவிட்டது. அரசியல்ரீதியான பிரச்னைக்கு இராணுவத்தீர்வு இருக்கமுடியாது என்று இலங்கை அரசுக்குப் புத்திமதிகூறிய இந்தியா தானே அதை மறந்து இப்பிரச்னைக்கு இராணுவரீதியாகத் தீர்வுகாண்பதில் ஈடுபட்டு பெரும் தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

தென்னாசியாவில் இந்தியாவுக்குள்ள தலைமைப்பொறுப்பை ஈழத்தமிழர்கள் ஒருபோதும் மறுத்ததில்லை. விடுதலைப்புலிகளும் மறுத்ததில்லை. ஈழத்தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தை இந்தியா நசுக்காதவரை இந்தியாவின் தலைமைக்கு அவர்கள் எதிர்ப்புக் காட்டப்போவதில்லை.

இந்தியாவின் பிராந்தியநலன்களையும் விடுதலைப்புலிகள் அறியாமல் இல்லை. அவற்றையும் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனாலும் தன்னுடைய வறட்டுப் பிடிவாதத்திற்காக இந்தப்போரை ராஜீவ்காந்தி தொடர்ந்து நடத்துகிறார். உடனடியாகப் போர்நிறுத்தம் செய்து இத்தகைய நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையைத் தொடங்கும்படி இந்தியாவுக்கு விடுதலைப்புலிகள் வேண்டுகோள்விடுத்தனர். பெரும்பாலான ஈழத்தமிழர்களும் தமிழ்நாட்டிலுள்ள கட்சிகளும் இந்த நிலைக்கு ஆதரவு தெரிவித்தன.

ஆனால் ''விடுதலைப்புலிகள் ஆயுதங்களை முழுமையாக ஒப்படைத்து உடன்பாட்டை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்தியஅரசு நிபந்தனை விதித்தது.'' அதாவது விடுதலைப்புலிகள் முழுமையாகச் சரணாகதியடைய வேண்டுமென்று இந்தியா விரும்புகிறது.

விடுதலைப்புலிகள் போரை நிறுத்தவும், பேச்சுநடத்தவும் முன்வந்து தாங்கள் நெகிழ்வாகயிருப்பதை மெய்ப்பித்துள்ளனர். ஆனால் இந்தியா வளைந்து கொடுக்காத தன்மையுடன் செயல்படுகிறது. இந்த நெருக்கடியிலிருந்து மீளுவதற்

கான வழிமுறைகளைக் கையாளாமல் இந்நிலையை மேலும்மேலும் சீர்கேடடையு மாறு இந்தியா செய்துவிட்டது. இந்தியாவிடம் இராசதந்திரமோ அல்லது நெருக்கடியைச் சமாளிக்கும் திறனோ இல்லை என்பது புலனாகிவிட்டது.

விடுதலைப்புலிகளின் அடிப்படை நலன்களுக்குப் பாதகமில்லாத வகையில் ஒரு சமரசத்திற்கு அவர்களைத் தூண்டும் இராசதந்திர நடவடிக்கைகளையோ, இராணுவ நடவடிக்கைகளையோ, நெருக்கடிகளைச் சமாளிக்கும் நடவடிக்கை களையோ கையாள இந்தியஅரசு முற்றிலுமாகத் தவறிவிட்டன. இத்தகைய வாய்ப்புகளில் ஒன்றைக்கூட விடுதலைப்புலிகளுக்குத்தர இந்தியா தயாராக யில்லை. வீம்புடனும், பிடிவாதத்துடனும் இராணுவரீதியான நடவடிக்கை எடுத்து இப்பிரச்னைக்குத் தீர்வுகாண இந்தியா முயன்று அதில் படுதோல்வி யடைந்துவிட்டது.

பிரதமர் ராஜீவினால் இப்பிரச்னையை சரியான கோணத்தில் அணுக முடியாமல் போனதற்கு முக்கியமான காரணம் ஒன்றுண்டு. இப்பிரச்னை தீர ஐந்து விதமான ஆலோசனைகள் அவருக்கு ஐந்து அமைப்புகளால் வழங்கப்படு கிறது. பிரதமரின் செயலகம், வெளிநாட்டுத்துறை, இராணுவம், ரா உளவு அமைப்பு (RAW), மத்திய உளவுத்துறை (IB) ஆகிய ஐந்து அமைப்புகளுக்கிடையே சரியான ஒத்துழைப்பு இல்லை. மாறாக இவைகள் விதவிதமான அணுகுநிலையை எடுத்து அந்த அணுகுமுறையைப் பிரதமர் பின்பற்ற வேண்டுமென்று வற்புறுத்து கின்றனர். அனுபவக்குறைவின்காரணமாகவும், அறியாமையின் காரணமாகவும் பிரதமர் ராஜீவ் இந்த ஐந்து அமைப்புகளில் யார் சொல்வது சரியென்று புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறுகிறார். அவருடைய தடுமாற்றம் நாட்டை இத்தகைய சிக்கலில் மாட்டி விட்டுவிட்டது. போதாக்குறைக்கு இந்தியத்தூதுவராக இருந்த தீட்சித் ஜெயவர்த்தனாவின் கையாளாகவே மாறி உண்மைகளைத் திரித்துக்கூறி செயல்பட்டார்.

இந்தியஅரசு இப்பிரச்னையை கையாள்வதில் எவ்வளவு மோசமாக நடந்து கொண்டது என்பதற்கு சீரிய உதாரணமாகக் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விளங்குகிறது. '1988ஆம் ஆண்டு நடுவில் சென்னையிலிருந்த தளபதி கிட்டுவுடன் ''ரா'' உளவுத்துறை அதிகாரிகள் பேச்சு நடத்தினார்கள். சில பிரச்னைகளைத்தவிர பெரும்பாலான பிரச்னைகளில் தீர்வு ஏற்பட்டது. எனவே ஒப்புக்கொள்ளப் பட்டவை குறித்து பிரபாகரன் அவர்களுக்குத் தெரிவித்து அவரின் அனுமதியைப் பெறுவதற்காக விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்த ஜொனி ''ரா'' உளவுத் துறையினால் இந்தியராணுவ விமானத்தில் வவுனியா அழைத்துச்செல்லப் பட்டார். பிரபாகரனைச் சந்தித்துவிட்டுத் திரும்பும் வழியில் இந்தியராணுவம் அவரைச் சுட்டுக்கொன்றுவிட்டது. இது தவறுதலாக நடந்தது என்று சொல்ல முடியாது. ஜொனி என்ன நோக்கத்திற்காகச் சென்றிருக்கிறார் என்பது முன் கூட்டியே இந்தியராணுவ அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே அடையாளம் தெரியாமல் அவரைச் சுட்டுவிட்டதாகக் கூற முடியாது. வேண்டு மென்றே திட்டமிட்டு இந்தியராணுவ அதிகாரிகள் இந்தப் படுகொலையைச் செய்தார்கள். ''ரா'' உளவுத்துறைமூலம் உடன்பாடு ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை. ஜொனியின் படுகொலையின் விளைவாக நிலைமை மறுபடியும் சீர்கேடடைந்தது. இந்திய அரசின்மேல் விடுதலைப்புலிகள் முழுமையாக நம் பிக்கையை இழந்தார்கள். ஒரு தவறுக்குமேல் மற்றொரு தவறு என அடுக் கடுக்கான தவறுகளை இந்திய அரசு செய்தது. பேச்சுவார்த்தைக்குக் கிட்டுவை இந்தியாவுக்கு அழைத்துவந்த இந்தியஅரசு, கிட்டுவுடன் பேச்சுவார்த்தை நடத்திய இந்திய அரசு, திடீரென கிட்டுவையும், 154 விடுதலைப்புலிகளையும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறைப்பிடித்தது. தேசப்பாதுகாப்பிற்குக் கிட்டுவினால் என்ன பாதகம் நேர்ந்தது என்று இன்னும் சொல்லப்படவில்லை. தேசப் பாதுகாப்புக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய ஒருவரை ஏன் இலங்கையி லிருந்து இந்தியராணுவ விமானத்தில் இந்தியஅரசு கூட்டிவந்தது? இப்போ

ஏன் அவரைக் கைதுசெய்தது? இந்த நியாயமான கேள்விகளுக்குச் சரியான விடையை இந்திய அரசினால் கூறமுடியாது. கிட்டுவும் மற்ற விடுதலைப்புலிகளையும் கைது செய்ததற்குத் தமிழகம் ஒன்றுதிரண்டு எதிர்ப்புத் தெரிவித்தது. இதைக்கண்டு அஞ்சிய இந்தியஅரசு கிட்டுவையும் மற்றவர்களையும் இலங்கைக்குக் கொண்டுசென்று இந்தியராணுவ முகாம்களில் சிறைவைத்தது.

மேலேகண்ட நிகழ்ச்சி இந்திய அரசாங்கத்தின் முரணான பல நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டுகிறது.

இப்பிரச்னை தீருவதற்குப் பல முட்டுக்கட்டைகள் உள்ளன. முதலாவது முட்டுக்கட்டை பிரதமர் ராஜீவின் தன்முனைப்புப் போக்காகும். தன்னுடைய பேச்சை பிரபாகரன் கேட்கவில்லையென்ற கோபத்தில் அவர் இன்னமும் செயல்படுகிறார். அடுத்து இந்திய ராணுவத்தின் தன்மதிப்பும் இப்பிரச்னை தீருவதற்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. இந்திய ராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவது என்று எடுக்கப்பட்ட முடிவு மிகத் தவறானது. ஆனால் இப்போது அங்கிருந்து எப்படி மரியாதையுடன் வெளியேறுவது என்பது மிகப் பெரிய கேள்விக்குரியதாகியிருக்கிறது.

இந்திய ராணுவம் அரசியல்வாதிகளின் இராசதந்திரத் தோல்விகளை மூடிமறைக்கப் பயன்படும் ஒரு கருவியாக ஆக்கப்பட்டுவிட்டது. சீக்கியர் பிரச்னையில் பிரதமர் செய்த தவறுகள் இராணுவத்தை வெகுவாகப் பாதித்துவிட்டன. திரிபுரா, மிசோராம், நாகலாந்து, மணிப்பூர், அசாம் போன்ற எல்லைப்புற மாநிலங்களில் அங்குள்ள மக்களின் உரிமைக் கிளர்ச்சிகளை ஒடுக்கும் இராணுவமாக இந்திய இராணுவத்தைப் பிரதமர் ராஜீவ் மாற்றிவிட்டார். இவையெல்லாம் இராணுவத்தின் மதிப்பைக் குறைத்துவிட்டது என்ற உணர்வு இராணுவவீரர்களிடையே பரவிக்கொண்டிருக்கிறது.

இலங்கைப்போரில் இந்தியராணுவத்தைத் தேவையில்லாமல் ஈடுபடுத்திய பிரதமர் ராஜீவ் தனது மாபெரும் தவறை ஒப்புக்கொள்ளவும் அதனைத் திருத்தவும் மறுக்கிறார். அவரின் இந்தப் போக்கின்விளைவாக இந்திய ராணுவம் பல இழப்புகளுக்கு ஆளானதோடு தனது மதிப்பையும் இழந்துவருகிறது. இதற்கிடையில் ராஜீவின் போக்குக்குத் தாளம்போடும் இந்தியராணுவத் தளபதிகள் ''இவ்வளவு காலம் போராடி ஆயிரக்கணக்கான வீரர்களைப் பலிகொடுத்த பிறகும், மூவாயிரம்கோடி ரூபாய்க்குமேல் செலவிட்டபிறகும் எதையும் சாதிக்காமல் திரும்புவது வெட்கக்கேடானது.'' என நினைக்கிறார்கள். எனவே அவர்கள் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இந்தியராணுவத் தளபதிகளில் பெரும்பாலோர் மேற்கு மற்றும் மத்திய இந்தியாவைச் சேர்ந்த இவர்கள் ஈழத்தமிழ் இளைஞர்களிடம் தோல்வி அடையநேர்ந்து வெளியேறுவதைப் பெரும் அவமானகரமாகக் கருதுகிறார்கள். இதுவரையில் இந்தியராணுவத்திலுள்ள அதிகாரிகள் தமிழர்களை வீரப்பரம்பரை என்று ஏற்றுக்கொண்டதில்லை. எனவே இப்போதும் அதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். இத்தகைய ஆதிக்க மனோபாவம்கொண்ட இராணுவத் தளபதிகளும், முரட்டுத்தனமான பிடிவாதப்போக்குக்கொண்ட ராஜீவ்காந்தியும் இப்போரைத் தொடர்ந்து நடத்தவே விரும்புகிறார்கள். இருதரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் பலியாவதைப்பற்றி அவர்கள் கொஞ்சமும் கவலைப்படுவதேயில்லை.

போர்த்துக்கீசிய ஏகாதிபத்தியத்திடமிருந்து கோவாவையும், ஹைதராபாத் நிஜாமின் மதவெறிப்பிடித்த ரசாக்கார் படையிடமிருந்து ஹைதராபாத்தையும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து காஷ்மீரையும் விடுவித்த இந்திய இராணுவம், வங்கதேச மக்களின் விடுதலைப்போராட்டத்திற்குத் துணையாக நின்று போராடி வெற்றிபெற்ற இந்தியராணுவம் இன்று இலங்கையில் சிங்கள அரசின் கூலிப்படையாகச் செயல்படுகிற இழிநிலைக்கு ஆளாகியிருப்பதுதான் உண்மையில் இந்திய இராணுவத்திற்கும் இந்தியாவுக்கும் அவமானம் ஆகும் என்ற மாபெரும் உண்மையை உணர்ந்து, தங்கள் தவறைத் திருத்திக் கொள்

வதற்குப்பதிலாக நேர் எதிராகச் செயற்படுகிறார்கள். விடுதலைப்புலிகளுடன் சமரசம் செய்து கொள்வதை அவமானமாகக் கருதுகிறார்கள்.

## 6. அமைதிப்படையின் பணி என்ன?

1980ஆம் ஆண்டில் ஆப்கான் அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் சோவியத் படைகள் அங்கு சென்று எதிர்க் கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்கு முற்பட்டன. ஆனால் ஐக்கிய நாடுகள் சபை இப்பிரச்னையை சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு என்ற அடிப்படையில் அணுகி, கடந்த சில ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள எண்ணற்றத் தீர்மானங்களில் ''ஆப்கானிய மக்களின் சுயநிர்ணய உரிமையை வெளிநாட்டுப்படைகள் மீறியிருக்கின்றன'' என்ற குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதைப்போலவே தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பறிப்பதற்கு இந்தியராணுவம் முற்பட்டுள்ளது என்பதுதான் உண்மையாகும். எனவே சர்வதேசச் சட்டப்படியும் இந்தியராணுவத்தின் இச்செயல் கண்டிக்கத்தக்கதாகும்.

கடந்தகாலத்தில் இந்தியாவின் அமைதிப்படைகள் தாங்கள் சென்ற நாடுகளில் எப்படி செயல்பட்டன என்பதை இப்போது நினைவுபடுத்திக்கொள்வது நல்லது. 1956ஆம் ஆண்டு எகிப்துக்கு எதிராக ஆங்கிலோ-பிரஞ்சு-இஸ்ரேலி தாக்குதல் தொடுக்கப்பட்டபோது அமைதிப்படை உருவாக்கப்பட்டது. ஐ.நா. சாசனப்படி அதற்கென்று தனியாக ஒருபடையை நிறுவமுடியாது. எனவே ஐ.நா. அவசரப்படை சினாய் பாலைவனப் பகுதியில் இருதரப்பினருக்குமிடையே நிறுத்தப்பட்டு போர்நிறுத்தம் செய்யப்பட்டது. அமைதிப்படை போராடும் படை அல்ல. போராட்டத்தில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் உடன்பாடுகளை நல்ல எண்ணத்தோடு அமல் நடத்துவதற்கு ஒத்துழைத்தால் ஒழிய அமைதிப்படை சரிவர செயல்படமுடியாது. தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைதிப்படையினர் சுடலாமேயொழிய போராடும் கோஷ்டிகளை அடக்குவதற்காகச் சுடமுடியாது. எகிப்துக்குள் ஆக்கிரமித்திருந்த இஸ்ரேலியப்படையை தங்கள் எல்லைக்குத் திரும்பிப்போகும்படி செய்வதற்கு அமைதிப்படை எத்தகைய முயற்சியும் செய்யவில்லை. இது இராசதந்திர முறையில் செய்யப்பட வேண்டிய ஒன்று என்று அறிவித்துவிட்டது. கொரியா, இந்தோசீனா போன்ற பல நாடுகளில் ஐ.நா. அமைதிப்படையில் இந்தியப் படைகள் பங்கேற்று சிறந்தவகையில் தொண்டாற்றி உள்ளன. ஆனால் இலங்கைக்கு இந்தியப்படைகள் அவசரமாக அனுப்பப்பட்டபோது அங்கு போராடிக் கொண்டிருக்கும் சகல தரப்பினரின் அனுமதியோடு அது அங்கு செல்லவில்லை. போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிங்கள அரசு அழைத்ததின் பேரிலேயே அது அங்கு சென்றது. மற்றொரு தரப்பான விடுதலைப்புலிகளோ மற்ற போராளிக் குழுக்களோ இந்திய அமைதிப்படையை அங்கு அழைக்கவில்லை.

இந்தியாவின் பாதுகாப்புக்கு எத்தகைய ஆபத்தையும் விளைவிக்காத விடுதலைப்புலிகளுடன் இந்திய அமைதிப்படை நேரடியான போராட்டத்தில் ஈடுபட்டது. இலங்கையில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக இவ்வாறு செய்ததாகக் கூறியது. பல்வேறு நாடுகளில் அமைதிப்படையாகப் பணியாற்றிய அனுபவத்தின் அடிப்படையில் இந்தியராணுவ அதிகாரிகள் இந்திய அரசாங்கத்திற்கு அறிவுரைகூறி இருக்க வேண்டும். விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்காக மட்டுமே இந்திய ராணுவத்தை அனுப்புவது பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கவேண்டும்.

சுதந்திரம் பெற்றதிலிருந்து நமது நாட்டின் எல்லைக்கு வெளியே இந்திய ராணுவத்தை அனுப்புவதென்றால் ''சர்வதேச அமைதியை நிலைநாட்டச்

செய்யும் காரியங்களுக்காக மட்டுமே'' என்பது இந்தியாவின் கொள்கையாக இருந்தது. கோவா, வங்காளதேசம் போன்றவற்றை விடுவிப்பதற்காக இந்திய ராணுவம் அனுப்பப்பட்டது விசேஷ சூழ்நிலைகளை ஒட்டியதாகும். மற்ற நாடுகளில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டும் வேலைகளுக்காக நமது ராணுவத்தை அனுப்புவது இந்திய ஜனநாயகத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ராஜீவ் உணர்ந்திருக்கவில்லை.

இராணுவத் தாக்குதலுக்கும், அமைதியை நிலவச்செய்வதற்கும் பெரும் வேறுபாடு உண்டு. ஆனால் நமது படைகள் அமைதியை நிலவச் செய்யும் வேலைக்குப் பதில் விடுதலைப்புலிகளை எதிரியாகக் கருதி எதிரிநாட்டில் செயல்படும் ஆக்கிரமிப்பு இராணுவம்போல் நடந்து கொண்டிருக்கிறது.

உடன்பாட்டின் சகல அம்சங்களையும் நிறைவேற்றும்வரையில் இந்திய ராணுவம் இலங்கையில் இருக்கும் என்று சொல்லுவது நம்மைநாமே ஏமாற்றிக் கொள்வதாகும். உடன்பாட்டில் இது தெளிவாகச் சொல்லப்படவில்லை. உடன் பாடு ஏற்படும்போது பிரதமர் ராஜீவ் கீழ்க்கண்ட அம்சத்தை உடன்பாட்டில் சேர்த்திருக்கவேண்டும். ''தமிழர்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட வடக்கு -கிழக்கு மாநில இணைப்பு, இந்த மாநிலத்திற்கு முழுமையான சுயாட்சி அதிகாரங்கள், இந்த இரண்டையும் இலங்கை அரசு ஏற்படுத்தத் தவறுமே யானால் அதை ஏற்படுத்தித்தரும் அதிகாரமும் இந்தியாவுக்கு உண்டு'' என்ற ஒரு முக்கியமான அம்சம் இந்த உடன்பாட்டில் சேர்க்கப்படவில்லை. விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்காவிட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து ஒடுக்கவும், ஆயுதங்களைப் பறிக்கவும் இந்திய இராணுவத்தை இலங்கை அரசாங்கம் வரவழைக்கலாம் என்று தெளிவாக உடன்பாட்டில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் உடன்பாட்டில்கண்ட அம்சங்களை நிறைவேற்ற இலங்கைஅரசு மறுத்தால் இந்தியா என்ன செய்யவேண்டும்? என்பது பற்றி உடன்பாட்டில் எதுவும் சொல்லப்படவே இல்லை. இவ்வாறு முட்டாள்தனமாக ஒரு உடன்பாடு செய்து கொண்டு இப்போது இந்தியராணுவம் வெளியேற வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் சொல்லும்போது இந்தியாவினால் எதுவும் செய்யமுடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

இலங்கையரசு நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றிய 13வது அரசியல் சட்டத்திருத்தம் மோசடியானது. இந்தியாவையோ அல்லது இந்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, மற்ற போராளி கள் அமைப்புகள் ஆகியவற்றையோ இலங்கையரசு கலந்தாலோசிக்கவேயில்லை. உடன்பாட்டின் பகுதி 2.15-ல் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. உடன் பாடு கையெழுத்தான 6 வாரங்களுக்குள் தமிழ் மாகாணத்திற்கு உரிமைகளும், அதிகாரங்களும் வழங்குவதுபற்றி இந்தியாவும், இலங்கையும் கூடிப்பேசி முடிவு செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தியாவைக் கலந்தா லோசிக்காமல் ஜெயவர்த்தனா இந்த அரசியல் திருத்தத்தை நிறைவேற்றியபோது ராஜீவ்காந்தியால் ஒன்றும் செய்யமுடியவில்லை. கேவலம் ஊராட்சிக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தைக்கூட இந்தச் சட்டத் திருத்தம் தமிழ் மாகாணசபைக்கு அளிக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி, இதர தமிழ்க் குழுக்கள் ஆகியவை யெல்லாம் இந்த மோசடியைப் பலமாகக் கண்டித்தன. ஆனாலும் ஜெயவர்த்தனா இதற்குமேல் எதுவும் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார். இந்தச் சட்டத்திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய பிறகு ''இவற்றை மறு பரிசீலனைச் செய்வதற்கு ஜெயவர்த்தனா ஒப்புக்கொண்டிருப்பதாக'' ராஜீவ் காந்தி சாக்குபோக்கு கூறினார்.

உடன்பாட்டின் முக்கிய அம்சங்களை கடந்த 2 ஆண்டு காலமாக இலங்கை அரசு நிறைவேற்றவில்லை. அதை ஏன் என்று ராஜீவ்காந்தியும் கேட்கவில்லை. பொம்மை முதலமைச்சரான வரதராசப்பெருமாள் கூட டில்லிக்குக் காவடி எடுத்து எவ்வித அதிகாரமும் கொடுக்கப்படவில்லை என முறையிட்டபோதும்

பிரதமர் ராஜீவ் கேளாக் காதினராகக் காட்சிதந்தார். ஆனால் இந்தியப்படை வெளியேற வேண்டும் என பிரேமதாசா கூறியபிறகு திடீரென தமிழர்கள் உரிமைகள்பற்றி ராஜீவ்காந்திக்கு நினைப்பு வந்திருக்கிறது. "உடன்பாட்டின் படி மாகாணசபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டபிறகே இந்தியப்படை வெளியேறும்" என அறிவித்திருக்கிறார்.

இந்தியராணுவம் வெளியேறினால் மற்ற போராளி இயக்கங்களை பிரபாகரன் ஒழித்துக்கட்டிவிடுவார் என்று இந்தியஅரசு அங்கலாய்க்கிறது. இந்திய அரசுக்குப் பிறந்திருக்கிற இந்த திடீர் கருணை எப்போது பிறந்தது என்பதை நாம் பார்க்கவேண்டும். 1987ஆம் ஆண்டு பெங்களூரில் சார்க் மாநாடு நடைபெற்றபோது ஜெயவர்த்தனாவுடன் இலங்கைத் தமிழர் பிரச்னையைப்பற்றி பேசுவதற்காக பிரபாகரனை மட்டுமே பிரதமர் ராஜீவ் அழைத்திருந்தார். மற்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்களை அவர் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. மற்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த போது "இவர்களெல்லாம் செல்வாக்கற்றவர்கள்" என இந்தியஅரசு வர்ணித்தது.

அதேயாண்டில் ராஜீவ் - ஜெயவர்த்தனா உடன்பாடு ஏற்படுவதற்கு முன்னால் டில்லிக்குப் பிரபாகரன் மட்டுமே அழைத்து இந்திய அரசு பேச்சு நடத்தியது. இந்த உடன்பாட்டை ஏற்க பிரபாகரன் மறுத்தபிறகே மற்ற இயக்கங்களின் தலைவர்கள் அவசரஅவசரமாக டில்லிக்கு அழைக்கப்பட்டு உடன்பாட்டிற்கு ஆதரவாக அறிக்கைகள் வெளியிடப் பயன்படுத்தப்பட்டார்கள்.

இலங்கையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலை விடுதலைப்புலிகள் புறக்கணித்தபிறகு மற்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இந்திய இராணுவ உதவியுடன் தேர்தலில் நிற்கவைக்கப்பட்டு வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது... இப்படி ஒவ்வொருமுறையும் ஈழத்தமிழர்களில் பெரும்பான்மையோரின் ஆதரவு பெற்ற இயக்கம் விடுதலைப்புலிகளின் இயக்கமே என்பதை ஏற்றுக்கொண்டு செயல்பட்டிருக்கிறது. தான் இழுத்த இழுப்பிற்கு விடுதலைப்புலிகள் வர மறுத்த போதுதான் மற்ற இயக்கங்களை முன்னிறுத்திச் செயற்பட்டது இந்தியஅரசு. மற்ற இயக்கங்களுக்குள்ள மக்கள் ஆதரவு என்ன என்பது இந்திய அரசுக்கு நன்றாகவே தெரியும்.

வியட்நாமில் பாவோடாய் என்பவரின் பொம்மை அரசை வியட்நாம் மக்களின் ஆதரவுபெற்ற அரசு என அமெரிக்கா வர்ணித்தது. வியட்நாமிலிருந்து அமெரிக்கப்படைகள் வெளியேறினால் பாவோடாய் அரசைக் கம்யூனிஸ்டுகள் அழித்துவிடுவார்கள் என்றும் அதைத் தடுப்பதற்காகவே தாங்கள் வியட்நாமி விருப்பதாகவும் அமெரிக்கா பசப்பியது. அதே பசப்பலை இப்போது ராஜீவ் காந்தியும் செய்கிறார். இலங்கைத் தமிழர் பகுதியிலிருந்து இந்தியப் படைகள் வெளியேறினால் ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்களை விடுதலைப்புலிகள் அழித்துவிடுவார்கள். அதைத் தடுப்பதற்காகவே இந்தியப் படைகள் அங்கு இருக்க வேண்டியது இருக்கிறது என்று ராஜீவ்காந்தியும் அவரது அடிவருடிகளும் கூறுகிறார்கள்.

> இலங்கைத் தமிழர்பகுதியில் சர்வதேச கமிஷன் ஒன்றின் மேற்பார்வையில் இந்தியப்படைகள் இருக்கவேண்டுமா? வெளியேற வேண்டுமா? என் பதற்காக மக்கள் வாக்கெடுப்பை நடத்துவதற்கு ராஜீவ்காந்தி தயாரா? என நாம் அறைகூவல் விடுக்கிறோம்.

தனது அரசியல் சதுரங்கத்திற்குத் தமிழர்களைப் பகடைக்காய்களாக ராஜீவ் பயன்படுத்துகிறாரே தவிர தமிழர் பிரச்னையைத் தீர்க்கும் எண்ணம் அவருக்கு இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

# 7. ராஜீவின் மனக்கோட்டை

உலகத்தின் 8வது தொழில் நாடாக இந்தியா விளங்குகிறது. உலகத்தின் 4வது பெரிய இராணுவம் இந்திய ராணுவம் ஆகும். உலகத்தின் 6வது பெரிய கடற்படை இந்தியக் கடற்படையாகும். இந்தப் பெருமைகளுக்கு இந்தியா உரியது என்றாலும் அதேவேளையில் உலகத்தின் ஏழ்மை நிறைந்த நாடுகளை வரிசைப் படுத்தினால் அதில் 15வது இடத்தில்தான் இந்தியா இருக்கும். இந்தியாவின் ஏழ்மையைப் போக்கும் வழிகளில் ஈடுபடாமல் தென்னாசியாவின் மாபெரும் தலைவராக தான் திகழ வேண்டுமென ராஜீவ்காந்தி மனக்கோட்டைக் கட்டு கிறார். ராஜீவ்காந்திக்கு அருகிலிருக்கும் அவரது ஆலோசகர்களும் அவரின் இந்தப் பேராசைக்குத் தூபம் போடுகின்றனர்.

''ஜவஹர்லால் நேருவின் இராசதந்திரமும், இந்திராகாந்தியின் அறிவுக் கூர்மையும் தோல்வியடைந்த இடத்தில் ராஜீவ்காந்தி வெற்றி பெற்றார்'' என இவர்கள் பிரச்சாரம் செய்கின்றனர். மேலும் ''தென்னாசியாவின் தலைமையை ஏற்பதற்கு ராஜீவ்காந்தியே முற்றிலும் தகுதியானவர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தென்னாசியா முழுவதையும் அடக்கி ஆண்ட காலத்திற்குப் பிறகு இப்போது தான் எல்லாவகையிலும் தகுதி வாய்ந்த தலைமை ராஜீவ்காந்தியின் வடிவத்தில் தென்னாசியாவுக்குக் கிடைத்திருக்கிறது. இந்நாடுகளைச் சேர்ந்த மற்ற தலைவர் கள் ராஜீவ்காந்தி அளவிற்குத் திறமையும், தகுதியும் பெற்றவர்கள் அல்ல. மேற்கு நாடுகளின் தயவில் தலைவர்களானார்கள்'' என்றும் கூற இவர்கள் தவறவில்லை.

''ஜவஹர்லால் நேருவின் காலத்திலோ அல்லது இந்திராகாந்தியின் காலத் திலோ தென்னாசியாவின் பெரிய வல்லரசு இந்தியா என்பதை மற்ற நாடுகள் ஒருபோதும் ஒப்புக்கொண்டதில்லை. ஆனால் ராஜீவ்காந்தியின் காலத்தில் அத்தகைய மதிப்பு இந்தியாவுக்குக் கிடைத்துவிட்டது. இலங்கையில் தமிழர்களின் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க இந்தியாவின் உதவியை இலங்கையரசு நாடியது. அதற்கிணங்க ராஜீவ்காந்தியும் இந்திய இராணுவத்தை அனுப்பினார். இரண்டா வதாக மாலத்தீவுகளில் நடைப்பெற்ற புரட்சியை ஒடுக்க அந்நாட்டின் அதிபர் இந்தியாவின் உதவியை நாடியபோது இந்திய ராணுவம் விரைந்து அங்கு சென்று அமைதியை நிலைநாட்டியது. இவ்விரு நிகழ்ச்சிகளும் தென்னாசியா வின் போலீஸ்காரனாக விளங்க இந்தியாவே தகுதிவாய்ந்த நாடு என்ற உண் மையை உணர்த்துவதாக'' ராஜீவ்காந்தியின் எடுபிடிகள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

ஆனால் இந்தத் தற்பெருமை கொஞ்ச காலத்திற்கு மட்டுமே நீடித்தது. இலங்கையின் பிரதமராகப் பிரேமதாசா பதவியேற்றவுடன் இந்திய இராணுவம் வெளியேற வேண்டுமென்று வற்புறுத்தினார். வங்காள தேசத்துடன் இந்தியா வுக்குப் பல பிரச்னைகள் உள்ளன. அவைகளைத் தீர்க்க இந்தியாவினால் முடியவில்லை. இந்தியாவுடன் நேபாளத்திற்கு உள்ள வணிக உறவுகள் முற்றிலு மாக முறிந்துவிட்டன. பாகிஸ்தான் ஏற்கெனவே இந்தியாவுக்கு எதிரியாக உள்ளது. மொத்தத்தில் தற்போது சின்னஞ்சிறிய மாலத்தீவு, பூடான் ஆகியவை தவிர மற்ற தென்னாசிய நாடுகள் அனைத்தும் இந்தியாவுக்கு விரோதமாக உள்ளன. நேருவின் காலத்தில் இந்த நாடுகள் இந்தியாவுடன் நேச உறவு கொண்டிருந்தன. இந்திராகாந்தியின் காலத்தில் அது தொடர்ந்தது. கடந்த காலத்தில் பாகிஸ்தான் ஒன்றுதான் இந்தியாவுக்கு எதிராக இருந்தது. இப்போது ராஜீவ்காந்தியின் காலத்தில் அனேகமாக எல்லா தென்னாசிய நாடுகளும் இந்தியாவுக்கு எதிராக அணிவகுத்திருக்கின்றன.

1971ஆம் ஆண்டு பாகிஸ்தான் இராணுவ அரசின் ஒடுக்குமுறையை எதிர்த்து வங்க மக்கள் போராடியபோது அந்தப் போராட்டத்திற்கு இந்தியா உதவி செய்தது. பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்னையான வங்கப் பிரச்னையில் இந்தியா தலையிடக்கூடாது என்று அமெரிக்கா, சீனா, பிரிட்டன் போன்ற நாடுகள் மிரட்டியபோது மறைந்த பிரதமர் இந்திராகாந்தி அதற்கு மசியவில்லை. வங்க விடுதலை இராணுவமான முக்தி வாஹினிக்கு உதவிபுரிய இந்திய இராணுவம் அனுப்பப்பட்டது. இதன்விளைவாக வங்கதேசம் உதயமானது. இந்தியாவின் இந்த மனிதாபிமானமான செயல் தென்னாசிய நாடுகளில் வாழும் சிறுபான்மை தேசிய இனங்களுக்குப் புதிய நம்பிக்கையைக் கொடுத்தது. இலங்கையில் வாழும் தமிழர்கள் பாகிஸ்தானிலுள்ள சிந்திகள், பட்டாணியர்கள், வங்கதேசத்திலுள்ள சக்மா மலைச்சாதியினர் போன்ற ஒடுக்கப்படும் சிறுபான்மை தேசிய இனங்கள் தங்களுடைய விடிவுக்கு உறுதுணை புரியும் நம்பிக்கை நட்சத்திரமாக இந்தியாவை நம்பியிருந்தனர்.

வங்கதேசத்திலுள்ள சிட்டகாங் மலைப்பகுதியில் வாழும் சக்மா மலைச்சாதியினர் புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியா பிரிக்கப்பட்டபோது இப்பகுதி பாகிஸ்தானுடன் சேர்க்கப்பட்டது. சக்மா மலைச்சாதியினர் இதை மிகக்கடுமையாக எதிர்த்தனர். அப்போது சர்தார் வல்லபாய்பட்டேல், சக்மா சாதி தலைவர்களை அழைத்துப் பேசினார். அவர்களின் நலன்களைப் பாதுகாக்க இந்தியா உறுதுணை புரியும் என்று வாக்குறுதியும் கொடுத்தார். ஆனால் வங்கதேச இராணுவ அரசு சக்மா மலைச்சாதியினரை ஒடுக்க முற்பட்டபோது சாந்தி பாஹினி என்னும் விடுதலை இராணுவத்தை அமைத்து அவர்கள் போர்க்கொடி உயர்த்தினார்கள், அவர்களுக்கு இந்தியஅரசு ஆயுத உதவி உட்பட எல்லா உதவிகளையும் செய்து வந்தது.

அதைப்போலவே பாகிஸ்தானில் எல்லை காந்தி அப்துல்காபர்கான் தலைமையில் பட்டாணியர்கள் தனிநாடு கோரி நடத்திய போராட்டத்தையும் இந்தியநாடு தொடர்ந்து ஆதரித்து வந்திருக்கிறது... அதைப்போலவே சிந்தி இனமக்கள் சுயநிர்ணய உரிமைகோரி நடத்தும் போராட்டத்திற்கும் இந்திய அரசு அனுதாபம் தெரிவித்து வந்திருக்கிறது.

இலங்கையிலுள்ள தமிழர்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்திற்கும் இந்திராகாந்தி காலத்தில் ஆதரவு தெரிவிக்கப்பட்டது. ஈழப்போராளிகளுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் இந்திய அரசால் வழங்கப்பட்டன.

இந்திராவின் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட இந்தக் கொள்கைகள் ராஜீவ் காலத்தில் அடியோடு கைகழுவப்பட்டுவிட்டன. வங்கதேச அதிபரான ஜெனரல் எர்ஷாத் உடன் ராஜீவ்காந்தி நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக சக்மா மலைச்சாதியினருக்கு இந்திய அரசு அளித்து வந்த உதவிகள் நிறுத்தப்பட்டு விட்டன. இந்தியப் பகுதிக்குள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கும் சக்மா மலைச்சாதியினர் இந்தியாவுக்குள் இருந்து வெளியேற வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தப்பட்டார்கள். இலங்கை அரசோடு இந்தியா உடன்பாடு செய்துகொண்ட பிறகு இந்தியாவிலிருந்த இலங்கை அகதிகளும் வெளியேற்றப் பட்டனர். இப்போது இந்திய ராணுவமே அங்குபோய் தமிழர்களை ஒடுக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. பாகிஸ்தானில் பெனாசிர் புட்டோ ஆட்சி பொறுப்பையேற்ற பிறகு இந்திய அரசின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பட்டாணியர்கள், சிந்திகள் ஆகியோரின் போராட்டங்களுக்கு ஆதரவு அளிப்பதை இந்தியா நிறுத்திக்கொண்டிருக்கிறது.

**தென்னாசிய நாடுகளில் வாழும் சிறுபான்மை தேசிய இனங்களின் உரிமைப் போராட்டங்களுக்கு இந்தியா ஆதரவு கொடுக்கும் என்ற நிலை அடியோடு மாறி இந்நாடுகளில் வாழும் சிறுபான்மை தேசிய இனங்களின் உரிமைக் கிளர்ச்சிகளை ஒடுக்க சம்பந்தப்பட்ட நாடுகள் உதவிகேட்டால் இந்தியஅரசு அவர்களுக்கு உதவிசெய்யும் என்னும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.**

1946ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக் கொள்கைக்கு எதிராக ஐ.நா.சபையில் முதன்முதலாகக் குரல் எழுப்பிய நாடு இந்தியா. உலக நாடுகள் தென்னாப்பிரிக்காவை பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியதும் இந்தியாவே. ஐ.நா. சாசனம் வகுத்துள்ள மனித உரிமை, அடிப்படை சுதந்திரம் பற்றிய கோட்பாடுகளுக்கு எதிராகத் தென்னாப்பிரிக்கா நடந்துகொள்கிறது என இந்தியா குற்றம்சாட்டி வருகிறது. ஆனால் இலங்கையில் இனவெறிக்கு ஆளாகித் தத்தளிக்கும் தமிழர்கள் தலையில் கல்லைத் தூக்கிப் போடுகிறது இந்தியா.

பாலஸ்தீன அரேபிய மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு இந்தியா தொடர்ந்து குரல்கொடுத்து வருகிறது. சகல உதவிகளையும் செய்து வருகிறது. நமீபிய விடுதலைப்போராட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை இந்தியா வழங்கி வருகிறது. ஆனால் அதே இந்திய அரசு இலங்கைத் தமிழர் பகுதிகளில் மனித உரிமைகளை நசுக்கி இராணுவச் சர்வதிகார ஆட்சியை நடத்தி வருகிறது.

ஆப்பிரிக்க மக்களின் இணையற்ற தலைவன் நெல்சன் மாண்டலாவை விடுவிக்க வேண்டுமென்று உலக அரங்கில் குரல் கொடுக்கிற இந்தியா, தமிழீழத்தில் இராணுவ முகாம்களில் ஆயிரக்கணக்கான தமிழர்களை அடைத்துவைத்துச் சித்திரவதைச் செய்கிறது.

வியட்நாமில் அமெரிக்க இராணுவக் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த இந்தியா, தமிழீழத்தில் தன்னுடைய இராணுவத்தை ஏவி அதே கொடுமைகளைச் செய்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு ஒருமுகமும், ஈழத்தமிழர்களுக்கு மற்றொரு முகமும் காட்டுகிற ராஜீவ்காந்தியின் இரட்டைவேடத்தை அம்பலப்படுத்த வேண்டும்.

தமிழீழத்தில் உள்ள துரோக இயக்கங்களுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து விடுதலைப்புலிகளுக்கு எதிராக அவர்களை ஏவி விட்டுள்ள இந்திய அரசு நிரந்தரமான உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்து வருகிறது. தனக்கு அடங்கிய ஒரு பொம்மை அரசு அங்கு இருக்க வேண்டும் அல்லது தமிழர்கள் ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டு சாக வேண்டும் என்ற சாடிஸ்டு மனோபாவத்துடன் இந்திய அரசு செயல்படுகிறது.

பிரதமர் இராஜீவின் இராசதந்திர மற்ற போக்கின் விளைவாக இந்தியாவின் வடபகுதியில் பஞ்சாப் பிரச்னை பற்றி எரிகிறது. அது தீர்வதற்கான வழிவகையே கண்ணுக்குப் புலப்படவில்லை. இப்போது தென்பகுதியில் தமிழீழம் தீப்பிடித்து எரிகிறது. இதற்கும் இராஜீவே காரணம்.

ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்து, அவர்களின் நாட்டைச் சுடுகாடாக்கி வரும் கொலைகார இராணுவம் தமிழீழத்தில் இருந்து வெளியேறியேயாக வேண்டும். இனி ஒரு கணமும் தமிழீழ மண்ணில் இந்திய இராணுவம் இருக்கக் கூடாது. வெளியேற்றப்பட்டே தீரவேண்டும்.

இந்திய இராணுவம் நடத்திய கொலைகள், கற்பழிப்புகள், கொள்ளைகள், அட்டூழியங்கள், மனித உரிமைகளை நசுக்கியது ஆகியவை குறித்து விசாரித்து, குற்றமிழைத்த கொடியவர் தண்டிக்கப்பட சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழர்களே! நாம் ஒன்றுபடுவோம்! போராடுவோம்.

கொலைகாரப்படையே
தமிழீழத்தைவிட்டு
வெளியேறு!

பாரதப்படை செய்த பாதகத்தால்...



நாங்கள் அனாதைகளானோம்.